43. Six powerful sparks emerged from Lord Shiva who is my father. The six-faced Lord Muruga is said to have emerged from these sparks of Lord Shiva. Hence Lord Shiva is fused in Lord Muruga and hence we must understand that Lord Mruga is the son of Lord Shiva. **-1026**

44. Goddess who appears as the Fire, Sun and the Moon; One who is beautiful; One who is the Sky; fair goddess Durga who protects the people of earth; One who is multi-coloured; Eeshwari who appears as Sakthi beside the black Lord Maheswaran; One who stands as Manonmani, the strength of Sadashiva; in the mind of those who think of her. All these are nothing but the forms of mother Parasakthi. **-1046**

45. Tripura Sakthi; One who gives Moksha; One who gives greatest joy; One who protects various planets like the earth as Parvathi; One who appears as Abirami (beautiful); One who is inexplicable in words or thoughts; One who showers her love, blessings and imparts knowledge to all living beings. **-1048**





தூணாக) உருவெடுத்து, என் அடி, முடி முதலில் யார் காண்பவரே உயர்ந்தவர் என்று கூற, பெருமாள் வராக(பன்றி) அவதாரம் எடுத்து பூமியை தோண்டிக் கொண்டு சிவனின் அடி காணப்புறப்பட்டார். பிரம்மன் அன்ன பறவை அவதாரம் எடுத்து மேலே முடி காண முயன்றார். எத்தனையோ யுகம் தோண்டி சென்றும், சிவபெருமானின் திருவடியை காணமுடியாமல், பூமிக்கு திரும்ப வந்து தன்னால் இயலவில்லை என ஒப்புக் கொண்டார். பிரம்மனும், பல யூகமாய் மேலே பறந்து சென்று ஐயனின் முடி காணமுடியாமல் இருக்க, அப்போது மேல் இருந்து கீழே வந்த ஒரு தாழம்பூவை கண்ட பிரம்மன் அதை எங்கு இருந்து வருகிறாய் என்று வினவ? அத் தாழம்பூவோ, நான் சிவனின் தலைமுடியிலிருந்து விழுந்தேன் யுகயுகமாய் கீழே வந்து கொண்டிருக்கிறேன். இன்னும் பூமியை அடையமுடியவில்லை என்றது. உடனே பிரம்மன், சரி நீ இப்போது கீழே சென்றவுடன் நான் முடியை பார்த்ததாக சிவனிடம் பொய்சாட்சி கூறு, என்று கேட்டுக் கொண்டார். பிரம்மன் பூமியை அடைந்து, முடியை கண்டதாக பொய் சொல்ல, இதனால் கோபமுற்ற சிவன், பிரம்மனுக்கு உலகில் தனிக்கோயில் வைக்கப்படாது என்றும், பொய்சாட்சி சொன்ன தாழம்பூவை பூஜைக்கு யாரும் பயன்படுத்தக் கூடாது என்றும் சாபம் கொடுத்தார். அதனால் தான் பிரம்மனுக்கு தனி கோயில் இல்லை – தாழம்பூவை நாம் பூஜைக்கு பயன்படுத்துவது இல்லை. அடிமுடி காணமுடியாதவன் எம்பெருமான் சிவன். அவனிலிருந்து வந்தவர்கள் பெருமாளும், பிரம்மனும் என்பதை இருவரும் அறிந்துக் கொண்டு சிவனை வணங்கினார்கள். அந்த நெருப்பு பிம்பம் அடங்கிய இடம் தான் திருவண்ணாமலை. இதுவே திருவண்ணாமலை கோயிலின் வரலாறு.

பெரும்பாலான சிவன் கோயில்களில் உட்பிரகாரம் சுற்றி வரும்போது பின்புறம் "லிங்கோத்பவர்" சிலையை காணலாம். அச்சிலையில் அடிமுடி தெரியாமல் சிவனும், கீழே வராக அவதாரத்தில் விஷ்ணுவும், அன்னபறவையாக பிரம்மனும் காட்சி அளிக்கின்றனர்.

முழுமையாக காணமுடியாதவன் சிவபெருமான் என்பதனை விளக்கவே இந்த மந்திரம் திருமூலரால் எழுதப்பட்டது என்பது என்னுடைய தாழ்மையான கருத்து.

9 மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது
காலை எழுந்து கருத்தறிந் தோதிடின்
ஞாலத் தலைவனை நண்ணுவ ரன்றே. **99**

மூலனாகிய நான் உரைத்த இந்த மூவாயிரம் தமிழ் மந்திரம், உலகம் தெரிந்து பயன் அடைய நந்தியெம்பெருமான் அருளாளே கூறியது. இத்திருமந்திரத்தை தினமும் காலையில் எழுந்து பொருள் உணர்ந்து படித்தீர்கள் என்றால், தலைவன் சிவபெருமானின் அருள் கிடைக்கும்.

10 விண்ணின் றிழுந்து வினைக்கீடாய் மெய்கொண்டு
தண்ணின்ற தாளைத் தலைக்காவல் முன்வைத்து
உண்ணின் றுருக்கியொ ரொப்பிலா ஆனந்தக்
கண்ணின்று காட்டிக் களிம்பறுத் தானே. **113**

பரம்பொருள் தன் விண்ணுலகை விட்டு இறங்கிவந்து, ஆன்மாக்களுக்கு ஏற்ப மனித திருமேனி கொண்டு குளிர்ச்சியான தன் பாதங்களை இந்த மனிதர்களுக்கு பாதுகாவலாய் வைத்து, பக்தனின் உள்ளத்தினுள் புகுந்து, உருகச்செய்து, ஈடு இணையில்லாத பேரானந்தத்தை காட்டி, நம்முள் இருக்கும் ஆணவம், கர்மம், மாயை என்கின்ற மலங்களைப் போக்கிடுவான்.

11 அப்பினில் கூர்மை ஆதித்தன் வெம்மையால்
உப்பெனப் பேர்பெற் றுருச்செய்த அவ்வுரு
அப்பினிற் கூடிய தொன்றாகு மாறுபோற்
செப்பினிற் சீவன் சிவத்துள் அடங்குமே. **136**

கடல்நீரில் உள்ள உப்பு தன்மையானது சூரியனின் வெப்பத்தால் உப்பு என்ற திடப்பொருளானது தனித்து நிற்கும். அவ்வுப்பினால் ஓர் உருவம் செய்து, அதை மீண்டும் கடல்நீரில் சேர்த்தால், அது கரைந்து, உருவம் மறைந்து மீண்டும் நீராகும். அவ்வாறு ஆன்மாக்கள் சிவனிலே ஐக்கியமாகும்.

(திருமூலர் கூற்றுப்படி, எல்லா மனிதனின் ஆன்மாவும் சிவத்தன்மை தான். எனவே முக்தியடைய வேண்டியது அவனிடத்திலே.)





34. If I (Thirumoolar) who am near to Goddess Parasakthi, who cannot be penetrated, am called to quantify number of breaths that has to be taken by a person; I would say a man who breathes 539 times a day can move closer to goddess Parasakthi and can achieve it through her blessings. **-700**

*[A man breathes 21600 times a day. This can be brought down through practice of Pranayama as stated by Thirumoolar. When a person brings down his breathing to 539 times a day, he attains a place close to goddess Parasakthi and can get her blessings. This also gives a person long life according to Thirumoolar]*

35. The body does not get destroyed if you reduce you feelings of lust; if you are slim then you can live long; limiting the amount of food eaten leads to a lot of good things; if this is followed then you can be like Lord Shiva who holds the *kamandalam* and has a blue neck. **-735**

36. Through penance and love, those who seek to attain the Lord, will have no death, no sorrow. One who knows God; can be a leader of the people or even the King. These are the truth stated by the people who have already attained the feet of the Lord. This truth must be imparted to all the people. **-764**

37. There are not many who practice the left and right nostril pranayama. Those who practice this exercise properly will experience a powerful glow. He can control the five senses and live up to hundred years. **-773**

38. I (Thirumoolar) worship and praise the God of knowledge. In my mind (mind which is like temple) I realize that the Lord who abides is my companion. I expose to you that Shiva yoga and the one word mantra. **-884**

*The one word mantra is 'OM'.*

39. One who constantly meditates 'Sivaya nama' will have no re-birth (attain moksha). One who constantly meditates can see the “Aananda thandava” of Lord Shiva, which is a divine dance that gives us enhancement. He who constantly meditates can get a fair and glowing body devoid of dirt. **-905**

30. In a temple build in an accurate way, if anyone tries to pull away even a brick from the wall he is sure to be destroyed even if he is the King himself; or a Sage who has done severe penance or a person with complete knowledge of Vedas. This is the command of the Lord himself. **-516**

31. Cleanliness, kindness, limited eating, patience, straight forwardness, truthfulness, stability are qualities that must be raised in oneself. With knowledge of those which ought not to be done like lust, theft, murder one must keep away from such things. When these ten qualities are followed, he can be considered as a good man who leads life with principles. **-556**

32. The inhalation for 16 counts through the left nostril is 'Poorakam'. The retention of the air for 64 counts is 'kumbakam'. The exhalation of air for 32 counts through right nostrils is 'resakam'. If this is done in any other way it is wrong. **-568**

**Pranayama Breathing Exercise :**

*The pranayama has been explained in this hymn. Through the left nostril, air must be inhaled slowly for about 16 seconds. The said air must be retained within the body for 64 seconds and then the air must be exhaled through the right nostril slowly for about 32 seconds.*

*This pranayama is very difficult to practice. The guidance of a trained person is advisable in practicing this skill. The result can be achieved only by step by step practice.*

*Thirumoolar in his Third Thanthiram 'Attanga yogam' has discussed pranayama, yoga, meditation and that one can attain Lord Shiva by practicing it sincerely. He has dedicated about 300 hymns to this subject.*

33. Goddess Prasakthi, the form of completeness has taken the form of seven maidens (Prami, Narayani, Maheswari, Gowthami, Varagi, Uruthirani, Indirani); desire, duties and gnanam are the three stages of life; if the number of maidens are multiplied with the three stages, they become twenty one maidens. When the five duties of Creating, protecting, destroying, blessing, concealing are multiplied with the twenty one maidens, then total of hundred and five maidens were formed.

These maidens accompany and assist Lord Vishnu, Brahma, Rudhiran, Maheswaran, Sadasivan in fulfilling their duties. **-663**

*[This hymn depicts the role of the goddess in brining about birth in the world]*





12 தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருவுரு சிந்தித்தல் தானே. **139**

அறிவு பூர்வமான செயல் யாதெனில் குருவின் உருவம் கண்டு வணங்குதல். அறிவானது குருவின் திருப்பெயரை சொல்லி கொண்டிருத்தல். அறிவு பூர்வமானது குருவின் திருவார்த்தை கேட்பது அறிவான செயல். குருவின் உருவத்தை நெஞ்சில் நிலைத்து நினைத்து இருப்பது.

(இம்மந்திரம் நமக்கு ஆன்மீக வழிக்காட்டும் குரு–ஆசான் ஆகியோரது புகழுக்காக சொல்லப்பட்டது. குரு என்பது சிவனாகவும் கொள்ளலாம்.)

13 பண்டம்பெய் கூரை பழகி விழுந்தக்கால்
உண்டஅப் பெண்டிரும் மக்களும் பின்செலார்
கொண்ட விரதமும் ஞானமும் அல்லது
மண்டி அவருடன் வழிநட வாதே. **144**

சுகம், துன்பம் ஆகியவைகளை அனுபவிக்க பிறந்த உடல் அவைகளை அனுபவித்து அடங்கி இறந்துப் போனால், இறந்தவனின் கூட சுகம் அனுபவித்த மனைவி, பிள்ளைகள் போகமாட்டார்கள். ஆனால், அந்த உடல் உயிரோடு வாழ்ந்த காலத்தில் செய்த புண்ணியமும், ஒழுக்கமும் தான் கூட செல்லுமே தவிர வேறு எதுவும் செல்லாது.

14 தன்னது சாயை தனக்குத வாதுகண்
டென்னது மாடென் றிருப்பர்கள் ஏழைகள்
உன்னுயிர் போம்உடல் ஒக்கப் பிறந்தது
கண்ணது காணொளி கண்டுகொ ளீரே. **170**

தன் நிழல் தனக்கு உதவாது. தான் சம்பாதித்தது எல்லாம் என்னுடையது அவை தனக்கு உதவும் என்பவன் அறிவில்லாதவன். நீ பிறக்கும் போது உன் உயிர் உன்னுடன் வந்தது என்றாலும் உயிர் போகும் போது உடல் தனியே அழிந்து விடும். எனவே உடலில், உயிர் இருக்கும் போதே அக கண்ணால் உள்ளே இருக்கும் இறைவனை உணர்ந்துக் கொள்.

15 மத்தளி ஒன்றுள தாளம்இ ரண்டுள
அத்துள்ளே வாழும் அரசரும் அஞ்சுள்ள
அத்துள்ளே வாழும் அரசனும் அங்குளன்
மத்தளி மண்ணாய் மயங்கிய வாறே. 189

மண்ணாலான இந்த உடம்பில் இழத்தல்–விடுதல் என்ற இரண்டு இயக்கம் (நமது சுவாசம்) இருக்கிறது. மேலும் அதனுள் ஐந்துவிதமான வாய், உணர்வு, கண், மூக்கு, செவி, என்கிற அரசர்கள் ஆளுகின்றனர். அவற்றுள் மேலான அரசனான சிவபெருமான் இருக்கிறான். அவன் அந்த உடலை விட்டு நீங்கி விட்டால், அந்த உடல் மண்ணோடு மண்ணாக கலந்துவிடும்.

16 அவ்வியம் பேசி அறங்கெட நில்லன்மின்
வெவ்விய னாகிப் பிறர்பொருள் வவ்வன்மின்
செவ்விய னாகிச் சிறந்துண்ணும் போதொரு
தவ்விக்கொ டுண்மின் தலைப்பட்ட போதே. 196

அவதூறு (புறம்) பேசி நியாயம் கெட காரணமாய் இருக்காதீர். கொடியவனாகிய பிறர்க்கு சொந்தமான பொருட்களை பறிக்காதீர். நல்ல நிலையில் இருந்து உணவு சாப்பிடும்போது யாராவது உதவி கேட்டால், அவர்களுக்கு ஒருபிடி உணவு கொடுத்துவிட்டு பின்பு சாப்பிடுங்கள். (அறவழியில் நடந்து மற்றவருக்கு உதவுங்கள்.)

17 கொலையே களவுட் காமம் பொய்கூறல்
மலவான பாதக மாம்அவை நீக்கித்
தலையாஞ் சிவனடி சார்ந்தின்பஞ் சார்ந்தோர்க்
கிலையாம் இவைஞானா னந்தத் திருத்தலே. 200

கொலை, திருட்டு, காமம், பொய், மது அருந்ததல் ஆகியவை பெரிய பாவங்கள். அவற்றை விலக்கி தலைமீது சிவபெருமான் திருவடியை சுமக்கும் இன்பம் அடைந்தார்க்கு வேறு துன்பங்கள் இல்லை. பேரானந்தமான சிவனோடு கலந்திருத்தலே இன்பமாகும்.





25. If Lord Shiva has graced upon you then Goddess Parasakthi's grace will also reach you. In the same way once you gain the grace of goddess Parasakthi then Lord Shiva will definitely grace you. If a person does penance meditating upon goddess Parasakthi and Lord Shiva then he can attain the eight *Sithikal* (skills) **-333**

*[The eight skills are 1. to diminish oneself (anima); 2. to maximize oneself (mahima); 3. to make oneself heavy (Karima); 4. to make oneself light (Elakima); 5. to achieve what you think (Prarthi); 6. to travel in different bodies (pirakamiyam) (This is the skill by use of which a siddha from Kailash got into the body of Sathanur Mulan and gave the incomparable Thirumantra to the whole world); 7. to achieve a higher level (Eesathuvam); 8. to mesmerize (Vasithuvam).]*

26. Goddess who bears Sun and Moon in her bosom; companion of Lord Shiva; auspicious goddess; the reason for the working of the entire world; who is component of the process of births in the world; the form of Om (pranavamantra); She is worshiped as Mohini by the celestial bodies; completeness; who is presented as Gnana Sakthi; the ultimate knowledge. **-402**

27. Sand is just one form but it can be used to make many articles (pot, vessel, plate etc.) Just like that Lord Shiva resides in all the human beings. Eyes that are in the body can see everything but itself. In the same way Lord Shiva resides in all the human beings but does not show himself and is hidden within us. **-440**

28. Those that give joy form by themselves; when it has to be destroyed, it gets destroyed; those sins that has to pass passes by; those that have to reach us will reach us by itself; those who realize that all these are the doings of the Lord himself will conduct himself according to the orders of the Lord himself and shall become a servant to Lord Shiva (Shivanadiar). **-504**

29. Can you find an object in the Lake when you have dropped it in the sea? In the same way when the Lord is within you, there is no use searching for Him outside. Only with the blessings of Lord Shiva can you use search for him within you. **-513**

*[Instead of searching for the Lord outside, it is wise to discover him within us.]*

18. An illiterate King is equal to Yama, the god of death. In a way, Yama is superior to a King who is not learned. An uneducated king will not follow any rules or morality and will commit murder. But Yama abides by the rules and will not hamper the path of good people. **-238**

19. Help everybody and anybody; do not differentiate between people; do not preserve stale food; before you eat, watch if any hungry person comes your way; do not be greedy; do not eat food urgently. Like the crow, always make sure you invite everybody and share before you start eating. **-250**

20. Lord Shiva can be worshipped just by use of leaf (*vilvam*). Give some green grass to the cow. When you are eating, give a handful of rice to a hungry person. Talk sweetly to everybody without hurting them. **-252**

21. Wealth amassed in a wrong way is of not use like the fruit of Etti, which cannot be consumed. Those who earn money by lending money for interest are considered to be cruel beings, who do not know the utility of money. **-260**

*[Etti fruit is a fruit which is sour tasting and is poisonous]*

22. Those that are kind to others and show their love can attain and see the feet of Lord Shiva. Those who have the courage to renounce the worldly life can attain moksha and reach Lord Shiva through penance. Those who are cruel by nature shall not get the blessings of the Lord and shall face the wrath of Yama, the Lord of death. **-266**

23. Those that are willing and pursue will attain the feet of Lord Shiva. Those with love and kindness can see the feet of the Lord Shiva. Those who commit sins and lead a sinful life will be struck between birth and death like in a dense forest without any defined pathway. **-273**

24. *Shiva Gathi* (Attaining Lord Shiva) can be achieved by: sense of justice and listening to reasons; listening to advice of the elders; understanding what sins ought not to be committed; listening to the hymns of the celestial beings (*devas*); listening to the various difference of opinion among people; listening to the significance of Lord Shiva who shines like gold. **-300**





18 கல்லா அரனுங் காலனும் நேரொப்பர்
கல்லா அரசனிற் காலன் மினநல்லன்
கல்லா அரசன் அறம்ஓரான் கொல்லென்பான்
நல்லாரைக் காலன் நணுகநில் லானே. **238**

படிக்காத அரசனும் (தலைவன்), எமனும் ஒன்று, மேலும் படிக்காத அரசனைவிட எமன் மிக நல்லவன். கல்வி அறிவு இல்லாத அரசன் அல்லது தலைவன் நியாயம் (அறம்) வழி நடவாமல் கொலை செய்வான். ஆனால் எமன், அறம் வழி நடக்கும் நல்லவர்களை நெருங்க மாட்டான்.

19 ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்
பார்ந்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்
வேட்கை யுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணுங் காலம் அறிமினே. **250**

யாவருக்கும் கொடுத்து உதவுங்கள். அவர், இவர் என்று வேறுபாடு பார்க்காதீர். யாராவது பசியோடு வருகிறார்களா என்று பார்த்துவிட்டு சாப்பிடுங்கள். பழைய உணவை பாதுகாத்து வைக்காதீர். அளவுக்கு, அதிகமாக ஆசைப்படுபவர்களே, வேகவேகமாக உண்ணாதீர். காக்கை போல் அனைவரையும் அழைத்து பங்கிட்டு உண்ணுங்கள்.

20 யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே. **252**

எல்லோரும் பரம்பொருளை பூஜிக்க ஓர் பச்சிலை (வில்வ இலை) போதும், பசு மாட்டிற்கு கொஞ்சம் புல் போன்ற உணவு, நாம் சாப்பிடும்போது இல்லை என்று வருவோர்க்கு ஒரு பிடி சோறு, எல்லோரும் பிறர் மனம் நோகாத வண்ணம் இனிமையாக பேசுதல்.

(இவையெல்லாம் எல்லோரும் எளிமையாக செய்ய முடிகிற நல்ல விஷயங்கள். செய்கிறோமா?)

21 எட்டி பழுத்த இருங்கனி வீழ்ந்தன
ஒட்டிய நல்லறஞ் செய்யா தவர்செல்வம்
வட்டிகொண் டீட்டியே மண்ணின் முகந்திடும்
பட்டிப் பதகர் பயன்அறி யாரே. **260**

(எட்டி பழம் என்பது கசப்பும், விஷத்தன்மையும் கொண்டது.) எட்டி மரத்தின் பழம் பழுத்து கீழே விழுந்தால் பயன் இல்லை. அதேபோல் நல்ல வழியில் சேர்க்காத செல்வம் எந்த பயனும் தராது. வட்டிக்கு விட்டு பணம் சேர்க்கும் கொடுமையாளர்கள் செல்வத்தின் பயன் தெரியாதவர்கள்.

22 கனிந்தவர் ஈசன் கழலடி காண்பர்
துணிந்தவர் ஈசன் துறக்கம தாள்வர்
மலிந்தவர் மாளுந் துணையுமொன் றின்றி
மெலிந்த சினத்தினுள் வீழ்ந்தொழிந் தாரே. **266**

எல்லோரிடமும் கருணை, அன்பு செலுத்துபவர் சிவபெருமானின் திருவடியை காணலாம். உலகை விட்டு விலகி துணிந்து தவம் செய்பவர்களும் மோட்சம் தரும் ஈசனிடம் சேரலாம். ஆனால், மலிவாக கொடியவராக இருப்பவர்கள் கடவுளின் துணையின்றி, நொடிந்து எமனின் கோபத்துக்கு அழிந்து போவார்.

23 ஆர்வம் உடையவர் காண்பர் அரன்தன்னை
ஈரம் உடையவர் காண்பார் இணையடி
பாரம் உடையவர் காண்பார் பவந்தன்னைக்
கோர நெறிகொடு கொங்குபுக் காரே. **273**

பரம்பொருளை அடைய வேண்டும் என்ற முயற்சியும், ஆர்வமும் இருப்பவர் சிவபெருமானை காணமுடியும். அன்பும், இரக்கமும் உடையவர் ஈசனின் திருவடி சேர முடியும். பாவச்செயல்களை புரிபவர் இவ்வுலகத்தையும் அத்தோடு சேர்ந்த பிறப்பு-இறப்பு என்கிற துயரையும், அன்பில்லாத அவர் கொடிய காட்டில் வழி தெரியாமல் சிக்கித் திரிவர்.





12. The following are considered as intellectual: to worship the form of your Guru; to meditate the name of your Guru; listening to the wise words of the Guru; constantly remember and cherish the form of your Guru. **-139**

*[Thirumoolar has in this mantra given the importance of Guru; this also can be interpreted to mean 'Lord Shiva' himself is the Guru.]*

13. The body of a person dies after going through all the joys and sorrows of his life; the wife or children who have shared all these moments will not accompany the body after its death. However, when the body is alive, his good deeds and virtues stands by the soul and leave with the soul. Nothing else leaves with the soul. **-144**

14. For a man his shadow is of no use; in the same way it is unwise to believe that the money and the riches earned by him is his property and will help him. Though your body comes along with your life during birth, during your death the body is separated from the soul and the body is destroyed. So, during the lifetime when the body and the soul are in unison, open the eyes of your mind and experience the presence of the god who is glowing inside you. **-170**

15. This body which is made of soil has two functions one of 'breathing in' and another of 'breathing out'. Inside it there are five senses. The mouth, eyes, nose and ears are the rulers of the senses. The ruler of the rulers is Lord Shiva. If Lord Shiva leaves his abode, then the body will be reduced ashes and will mix with the soil. **-189**

16. Do not defame others thereby live without morality. Do not be cruel and grab what is not yours. When you are in a good position and eating your food; if someone asks; given them a handful of rice and then have your food. **-196**

*[Live life with principles and help others]*

17. Murder, theft, lust, lies, drinking alcohol create great hindrances in life. Once you clear these and adorn the feet of Lord Shiva on your head then you will be free from any further sorrow and live life with great happiness with Lord Shiva. **-200**

*tell Lord Shiva that he saw his head. So Lord Brahma lied to Lord Shiva that he had seen his head and the flower stood his witness. Lord Shiva who became annoyed with these lies cursed Lord Brahma saying that there would be no temples established for him in his fame and cursed the flower (thazhampoo) and said that that flower would never be used for worship. That is why there are no temples for Lord Brahma and the flower thazhampoo is not used for worship. The place where the flame (form of Lord Shiva) cooled down is considered to be Thiruvannamalai. This is the history of the Thiruvannamalai temple.*

*In most of the Shiva temples, one can see the statute of 'Lingothbhavar', a statute in which the feet or the head will not be visible. You can see Lord Vishnu as Varaha and Lord Brahma mounting his swan.*

*Thirumoolar in his mantra has described Lord Shiva as one who cannot be seen entirely and for this purpose has recited this mantra. This is our earnest opinion.*

9. These three thousand hymns which I (Thirumoolar) have given are with the blessings of my guru Nandeeshwaran. Those who read these mantras, early in the morning, with knowledge of its meaning will get the grace of Lord Shiva, who is the very source of the knowledge of the world. **-99**

10. The Lord who left his abode in the heaven and took the form of human being in accordance with the soul; one who made His cool feet our protectors; One who penetrated our heart and made us melt; One who has shown bliss which is incomparable thereby erasing filth like selfishness, arrogance and materialistic thoughts. **-113**

11. Sea water is salty. Due to evaporation it separates into salt. If a statute made of salt is put in the water, the salt dissolves and merges into water. In the same way though the soul and Lord Shiva appear as different entities; the soul will merge with Lord Shiva. **-136**

*[According to Thirumoolar, the soul of a man is Lord Shiva and one should merge in it with this knowledge]*





24 அறங்கேட்டும் அந்தணர் வாய்மொழி கேட்டும்
மறங்கேட்டும் வானவர் மந்திரங் கேட்டும்
புறங்கேட்டும் பொன்னுரை மேனியெம் ஈசன்
திறங்கேட்டும் பெற்ற சிவகதி தானே. **300**

நீதி, நியாயங்களை கேட்டும், பெரியோர்களின் அறிவுரையை கேட்டும், செய்யக் கூடாத பாவங்கள் எவையெனக் கேட்டும், தேவர்களின் மந்திரங்களை கேட்டும், இவற்றுக்கு எதிராக கூறப்பட்டுள்ள (நாத்திகம்) மற்றவைகளையும் கேட்டு, தங்கம் போல் மின்னுகிற ஈசனின் தன்மை எவை என கேட்டும் பெறபடுவதுதான் சிவகதி. சிவனை அடைதல்.

25 சத்தன் அருள்தரிற் சத்தி அருளுண்டாஞ்
சத்தி அருள்தரிற் சத்தன் அருளுண்டாஞ்
சத்தி சிவமாம் இரண்டுந்தன் னுள்வைக்கச்
சத்தியம் எண்சித்தித் தன்மையு மாமே **333**

எம்பெருமான் சிவன் கருணைக் கொண்டு அருள் தந்தால், கூடவே பராசக்தியின் அருளும் கிடைக்கும். அதேபோல் அன்னையின் அருள் கிடைத்தால், பரம்பொருளின் அருளும் தானே கிடைக்கும். பராசக்தியையும், பரம்பொருளான சிவனையும் உள்வைத்து தியானித்தால், உண்மையாகவே அஷ்டமா சித்திகளை பெறலாம்.

<u>அஷ்டமா சித்தி - எட்டு வகையான சித்தி :</u> 1. சுருக்கிக் கொள்ளுதல் (அணிமா) 2. விரிவடைதல் (மகிமா) 3. எடை அதிகப்படுத்துதல் (கரிமா) 4. எடை குறைதல் (இகிமா) 5. நினைத்ததை அடைதல் (பிரார்த்தி) 6. கூடு விட்டு கூடு பாய்தல் (பிராகாமியம்) இந்த சித்தி கொண்டுதான் கயிலை சித்தர் சாத்தனூர் மூலன் உடலில் புகுந்த இச்சிறப்பு திருமந்திரம் ஓதினார். 7. மேன்மை பெறுதல் (ஈசத்துவம்) 8. வசியப்படுத்துதல் (வசித்துவம்).

26 வாரணி கொங்கை மனோன்மணி மங்கலி
காரணி காரிய மாகக் கலந்தவள்
வாரணி ஆரணி வானவம் மோகினி
பூரணி போதாதி போதமு மாமே. **402**

சூரியனையும், சந்திரனையும் தனங்களாக உடையவள், சதாசிவ மூர்த்தியின் நாயகியுமானவள், மங்கள நாயகி, உலகின் எல்லா இயக்கத்திற்கும் காரணமானவள். உயிர் படைத்தலின் நிகழ்விலும் கலந்தவள். ஓம் எனும் பிரணவ வடிவமும் ஆனவள். தேவர்கள் போற்றி துதிக்கும் மோகினியாகவும், முழுமையானவளும், அறிவின் உச்சமாகவும், ஞான சக்தியாகவும் விளங்குகிறவள் அன்னை பராசக்தி.

27 மண்ணொன்று தான்பல நற்கல மாயிடும்
உண்ணின்ற யோனிகட் கெல்லாம் ஒருவனே
கண்ணொன்று தான்பல காணுந் தனைக்காணா
அண்ணலும் இவ்வண்ண மாகிநின் றானே. **440**

மண் ஒன்று தான். ஆனால் அது பல நல்ல பொருட்களாக உருப்பெறும் (பானை-சட்டி-தட்டு) அதே போல் எல்லா உயிரிடத்திலும் உள்ளே சிவன் ஒருவனாக இருக்கிறான். கண்ணால் வெளியிலுள்ள உள்ள அனைத்தையும் பார்க்க முடியும் ஆனால், தன்னை அது பார்க்க முடியாது. அதுபோல் சிவபெருமானும் எல்லா உயிரிடத்திலும் இருந்தும், அந்த உயிர்க்கு காட்சி தராமல் மறைந்து இருக்கிறான்.

28 ஆவன ஆவ அழிவ அழிவன
போவன போவ புகுவ புகுவன
காவலன் பேர்நந்தி காட்டித்துக் கண்டவன்
ஏவன செய்யும் இளங்கிளை யோனே. **504**

இன்பத்திற்கு தேவையானது தானே உருவாகும். அழிய வேண்டிய நேரத்தில் அது தானே அழியும். போக வேண்டிய வினைகள் போகும். நம்மை வந்து சேர வேண்டிய நல்லவை தானே வந்து சேரும். இவை எல்லாம் நம்மை காக்கின்ற பரம்பொருளின் செய்கை என உணர்ந்தவன். அவன் ஆணைக்கு ஏற்ப செயல்படுகின்ற தகுதி உடையவன் ஆவான். **(எல்லாம் அவன் செயல்)**





6. The goal of human life is to reach Lord Shiva's feet. How does man take birth again and again without attaining his feet? They are those who did not practice proper penance in their past life. Then the question arises as to why was I (Thirumoolar) born? Do you know why the Lord gave me birth? I was born to enunciate the core of Vedas (*aagamam*) and sing the Lord's praise in this beautiful Tamil language. **-81**

7. The fruits I (Thirumoolar) achieved through penance have to reach the common man. I want to share the importance of Vedas (*Shiva gnanam*) which spreads as far as the sky; the mantra is one that is already merged with the each person's body and soul and is within us; if you keep thinking about this often, then Lord Shiva will automatically appear inside you. **-85**

*[The mantra so stated by Thirumoolar's Thirumantra is “Om Namachivaya”]*

8. Lord Vishnu and Lord Brahma, who went in search of the feet and head of Lord Shiva, respectively, could not do so. Lord Vishnu admitted that he could not see the feet of the Lord Shiva. However Lord Brahma lied to Lord Shiva stating that he had seen his head. **-88**

*This hymn talks about the following history: Once there was a fight between Lord Brahma (the Creator) and Lord Vishnu (the Protector) as to who among them was great. Lord Shiva appears before them in the form of a massive fire. He told both the Gods that the one who sees his feet or head first will be considered the greatest. Lord Vishnu then assumed the form of a wild boar (Varaha avataram) and went into the earth in search of the feet of Lord Shiva. Lord Brahma mounted his swan and flew upwards in search of the head of Lord Shiva. Both gods traveled through various ages and still could not find the feet or the head of Lord Shiva. Lord Vishnu who got tired of plowing through the earth return to Lord Shiva and admitted his defeat; Lord Brahma who was traveling up saw a flower (thazhampoo) falling down. He asked the flower from where it was falling down. The flower said it fell from the head of Lord Shiva and has been falling down for so many ages and has still not reached the earth. Lord Brahma then told the flower that it should be his witness; so that he could*

## (VINAYAKAR KAAPU)

Lord, who has five hands inclusive of his trunk; one who has been bestowed the face of an Elephant; whose tusk is as white as the glowing moon; son of Lord Shiva; one whose has in-depth knowledge; I have placed you in my mind and I worship your feet.

1. The unwise believe that love and Lord Shiva are distinct entities. People do not realize that Lord Shiva resides where there is demonstration of love. When one realizes this, then they will attain Lord Shiva through the path of love. **-270**

2. You cannot find anyone similar to Lord Shiva. None are his equal; He shines beyond earth like Gold; His hair resembles the flames of a massive fire; yet he is as cool as a Lotus flower. **-05**

3. He is more blistering than fire; He is cooler than water; yet there is no one who has become aware of his kindness; His mind is more gentle than a child; He stays beside His devotee; He showers more love than a mother; He is the One whose hair falls down to his shoulders. **-08**

4. Lord Shiva; is the One who has not been created but has formed himself; revere him and worship him; praise him; if this is done then He who dwells in all eight directions; He who spreads in the sky and the earth will guide us and will embrace us within him. **-35**

5. With Umayaval on his left side as Ardhanareeswarar, Lord Shiva gave to the world 28 *Agamams* (core of the Vedas). As five headed Sadhasivam, from his Eesanam head, he imparted these 28 *Aagamams* to the celestial bodies who stood humbly before him with folded hands. **-57**

*[Thirumoolar is the first person who has declared that the 28 Aagamams are the core fo the four Vedas. The five heads of Sadhasivam is known to be following: Vamadevam, Agoram, Tharpurudam, Sathyosadham and Eesanam]*





29 கடலிற் கெடுத்துக் குளத்தினிற் காண்டல்
உடலுற்றுத் தேடுவார் தம்மையொப் பாரிலர்
திடமுற்ற நந்தி திருவரு ளாற்சென்
றுடலிற் புகுந்தமை ஒன்றறி யாரே. **513**

கடலில் பொருளை போட்டுவிட்டு குளத்தில் தேடினால்? நமது உடம்பினிலே உற்று காண்பதை விட்டு, அதை வெளியே தேடுவது முட்டாள்தனம். உறுதியான சிவபெருமானின் அருள் நம்முள் புகுந்து இருப்பதை நாம் அறியாமல் இருக்கிறோமே?

(வெளியே கடவுளை தேடுவதைவிட நம்முள்ளே தேடுவது என்பதைதான் இம்மந்திரம் உணர்த்துகிறது.)

30 கட்டுவித் தார்மதிற் கல்லொன்று வாங்கிடில்
வெட்டுவிக் கும்அபி டேகத் தரசசை
முட்டுவிக் கும்முனி வேதிய ராயினும்
வெட்டுவித் தேவிடும் விண்ணவன் ஆணையே. **516**

உரியமுறையில் கட்டப்பட்ட கோயிலின் மதில் சுவரில் இருந்து ஒரு கல்லை பிடுங்கினால் கூட, அவ்வாறு செய்தவன் மகுடம் சூடிய மன்னன் ஆனாலும், தவம் செய்த முனிவன் ஆனாலும், வேதம் தெரிந்த படித்தவனானாலும் அழிந்து போவது உறுதி இது இறைவனின் கட்டளை. **(கோயில் சொத்து குல நாசம்)**

31 தூய்மை அருளுண் சுருக்கம் பொறைசெவ்வை
வாய்மை நிலைமை வளர்த்தலே மற்றிவை
காமங் களவு கொலையெனக் காண்பவை
நேமியீ ரைந்து நியமித்த னாமே. **556**

சுத்தம், கருணை, அளவாக சாப்பிடுதல், பொறுமை, நேர்மை, உண்மை, உறுதியாக இருத்தல், ஆகிய பண்புகளை வளர்த்துக் கொண்டும், செய்ய கூடாதவைகளான தவறான மோகம், திருட்டு, கொலை என்பதை அறிந்து அவைகளை விட்டு விலகி இருத்தல் ஆகிய பத்து குணங்கள் உடையவன். அறவழியில் (நல்வழி) வாழும் நல்லவன் எனலாம்.

32 ஏறுதல் பூரகம் ஈரெட்டு வாமத்தால்
ஆறுதல் கும்பம் அறுபத்து நாலதில்
ஊறுதல் முப்பத் திரண்டதி ரேசகம்
மாறுதல் ஒன்றின்கண் வஞ்சக மாமே. **568**

இடது பக்க மூக்கு துவாரத்தின் (நாசி) வழியாக பதினாறு மாத்திரை அளவில் காற்றினை பொறுமையாக உள் இழுத்தல் பூரகம். அதனை உடம்பினுள் 64 மாத்திரை கால அளவு வைத்தல் கும்பம். பின்பு வலது பக்க மூக்கு துவாரம் வழியாக மெதுவாக 32 மாத்திரை கால அளவு வெளி விடுதல் ரேசகம். மேல் சொன்ன முறைக்கு மாறாக செய்தால் அது தவறாகும்.

<u>மூச்சு பயிற்சி (அல்லது) பிராணயாமம் (அல்லது) இடகலை வடகலை :</u>

இடகலை (Left) இடது பக்க மூச்சு இழுத்தல் "பூரகம்"
வடகலை (Right) வலது பக்கமாக மூச்சு விடுதல் "இரேசகம்"
இழுத்த மூச்சினை உள் நிறுத்துதல் "கும்பகம்"
மாத்திரை என்பது கால அளவு. ஒரு மாத்திரை - ஒரு விநாடி.

16 நொடி இழுத்து 64 நொடி வைத்து 32 நொடி வெளியே விடுவது என்பது மிக மிகக் கடினம். சிறிது சிறிதாக பயிற்சி மேற்கொண்டு முயற்சிக்கலாம். முன் அனுபவம் உள்ளவர்களிடம் கற்றுக் கொண்டு செய்வது சாலச்சிறந்தது.

திருமூலர் அருளிய மந்திரங்களில் இந்த பகுதி மிக முக்கியமானது. மூன்றாம் தந்திரத்தில் "அட்டாங்க யோகம்" என்ற தலைப்பில் இருந்து தியானம், அதன் பலன், முக்கியத்துவம் அவற்றின் மூலமாக கடவுளை காணும் வழி என சுமார் 300 மந்திரங்களுக்கு மேல் விளக்கி உள்ளார்.

33 பூரண சத்தி எழுமூன் றறையாக
ஏரண கன்னியர் எழுநூற்றஞ் சாக்கினார்
நாரணன் நான்முக நாதிய ஐவர்க்குங்
காரண மாகிக் கலந்து விரிந்ததே. **663**

பரிபூரணமான பராசக்தி ஏழு கன்னிகைகளாகவும், (பிராமி, நாராயணி, மகேஸ்வரி, கௌமாரி, வாராகி, உருத்திராணி, இந்திராணி) இச்சா, கிரியை, ஞானம் என்கின்ற மூன்று நிலைகளில் மேற்சொன்ன



*classic, which we thought will be useful to everyone.*

*You may now ask who is this Thirumoolar? The following is considered as his history in abridged form. Thirumoolar is said to be a sage who originally resided in the Kailash Mountains. He was on a tour in southern India. He had visited various temples in southern region. When he was on his way to River Kaveri, he heard the cries of cows. When he went to find out the reason, he found that the cow herd 'Mulan' had died and the cows were grieving his death. The sage was moved by the grief of the cows. He also realized that only Mulan could console them and take them back home safely. For this reason, the Sage used the skill of transmigration (Pirakamiyam) and migrated from his body to the body of Mulan. When he woke up as Mulan, the cows became very joyful and he completed the duty of leaving all the cows in their homes. On return, he found that his body had vanished. Immediately he realized that this was the work of Lord Shiva, who had given him this birth in the body of Mulan to give the common man the essence of the Aagamams (core of Vedas) and sing Lord Shiva's praise in the beautiful Tamil language.*

*Thirumoolar, as he was hence known was said to be in a state of trance. He said to come out of it once a year and give one Thirumantra per year. He is thus said to have given three thousand mantras in a span of three thousand years.*

*In this book I have attempted to give explanation to the 100 hymns picked by us in English. This is not an attempt to translate the original mantra. I believe the English explanation will be useful to those who are less fluent with the Tamil Language yet seek to understand the meaning of the mantras given in this classic scripture.*

*I sincerely thank my husband* ***K. ARIVUNITHI,*** *my co-author for having given me this opportunity to read and understand such an invaluable scripture and* ***Siva Sri S. KATCHABESHWARA SIVACHARI*** *the senior-most pundit of the Kachaleeshwarar Temple, Chennai 1, who was confident of my ability to approach this subject. But for both of their confidence and support, I would not have been able to fulfill this attempt. I hope this attempt of mine is useful and fruitful to all of you.*

**DEEPTHI ARIVUNITHI**
Advocate

THIRUMOOLAR'S

# THIRUMANTHIRAM

*How is Shiva Gathi possible? A common man always believes that you can reach the feet of Lord Shiva only through severe penance, detachment from family and by residing in the deepest forest or the highest mountains. Can a common man attain Shiva Gathi without following any of these? Thirumoolar says, "**Yes you can**!"*

*Thirumoolar's Thirumanthiram is a cherished classic to those who have understood the content and import of all the three thousand mantras stated therein. This well known and little read classic has the ability to guide a common man to achieve his goal; whether it is to attain the glorious feet of Lord Shiva; the attainment of the eight skills/Siddhis; to enhance his lifespan up to hundred years or merely aids simple living and high thinking.*

*The sheer fact that the simple facts and practices stated by Thirumoolar (a Siddha) believed to have lived 3000 years ago is relevant and relatable to this century and to our lifestyle is astounding and stupendous. This classic caters to almost all the age groups of people. In a century wherein everywhere around us we see people busy with their own schedules and life, humanity is totally at a loss. It is through knowledge and reading of such an invaluable scripture as the Thirumantram that a person can realize within himself the value of kindness, humanity and interaction with others. Self-realization is a must to every human being. In some point of time in our life, we stop to think the reason for our birth, the reason why we are leading our life in the way we are and what we have achieved so far. This realization may come in very late in most of us and we fail in our attempt to attain self-realization.*

*The main reason we have chosen to bring out this book is to make this task simple. This classic through various hymns brings out the concept of self-realization and methods through which you can lead a principled life. It is amazing to note that though the scripture enunciates various methods of self-realization, attaining moksha and morals with which one should lead life; none of these methods ask you to alter your day to day life. We have hand picked about 100 songs from this ingenious*





கன்னிகைகளை பொருத்தி 21 அழகான கன்னிகள் (3x7=21), ஐந்தொழிலான படைத்தல், காத்தல், அழித்தல், அருளால், மறைத்தல் ஆகியவைகளுக்கு கலந்து (21x5=105) 105 கன்னிகளாயினர். திருமால், பிரம்மன், உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன் ஐவருக்கும் அவரவர் தொழிலுக்கு உதவும் காரணியாக அவர்களோடு கலந்து நின்றாள்.

(உயிர் படைப்புகளில் அம்பாளின் பங்களிப்பு பற்றியும் அவளின் பரிமாணங்கள் பற்றியும் இம்மந்திரம் விளக்குகிறது.)

34 ஆய்வரும் அத்தனி நாயகி தன்னுடன்
ஆய்வரு வாயு அளப்பது சொல்லிடில்
ஆய்வரும் ஐஞ்ஞாற்று முப்பதொ டொன்பது
மாய்வரு வாயு வலப்புள் ளிருந்ததே. **700**

ஆராய்ந்து அறிவதற்கு முடியாத பராசக்தியுடன், ஆராய்ச்சிக்குரிய இந்த வாயுவின் (மூச்சுக் காற்று) அளவை சொல்ல வேண்டுமாயின், 539 என்ற அளவில் மூச்சுக்காற்று இருந்தால், அது அப்பராசக்தியின் அருளில் ஒடுங்கி இருக்கும் என்று கொள்ளலாம்.

(இப்பாடலில் திருமூலர் இன்று அறிவியலால் கண்டறியப்படுகின்ற செய்திகளை அப்போதே கூறியுள்ளார்.) ஒரு நாளில் சராசரியான மனிதன் 21,600 எண்ணிக்கை அளவில் சுவாசிக்கிறான். இந்த சுவாச எண்ணிக்கையை தியானப்பயிற்சி மூலம் குறைத்தால், நாம் அம்பாளின் அருளை பெறலாம். திருமூலர் வாக்குப்படி, 21,600 லிருந்து 539 என்ற அளவில் குறைப்பது என்பது, கடுமையான பிராணாயாமம் பயிற்சியில் தான் சாத்தியப்படும். சாத்தியப்பட்டால் தேவ உடல் பெறலாம்.

35 அண்டஞ் சுருங்கில் அதற்கோ ரழிவில்லை
பிண்டஞ் சுருங்கிற் பிராணன் நிலைபெறும்
உண்டி சுருங்கில் உபாயம் பலவுள
கண்டங் கறுத்த கபாலியு மாமே. **735**

காமம் குறைத்தால் உடல் அழியாது. உடம்பு மெலிந்து இருந்தால் உயிர் நெடுநாள் வாழும். உணவு கட்டுப்பாடு இருப்பின் அது பல நன்மைகளை தரும். இம்முறைகளை பின்பற்றினால், நீல நிறமுடைய கழுத்தும், கையில் மண்டை ஓடு சுமந்த சிவன் போல் நீயும் ஆகலாம்.

36 நாடவல் லார்க்கு நமனில்லை கேடில்லை
நாடவல் லார்கள் நரபதி யாய்நிற்பர்
தேடவல் லார்கள் தெரிந்த பொருளிது
கூடவல் லார்கட்குக் கூறலு மாமே. **764**

தவத்தினாலும், அன்பாலும், நல்ல பண்பினாலும் இறைவனை நாட நினைப்பவர்கள், ஈசனை அடைய நினைப்பவர்களுக்கு மரணம் இல்லை ஓர் துன்பம் இல்லை. கடவுளை அறிந்தவர் மக்கள் தலைவனாக (அல்லது) மன்னனாக கூட ஆகலாம். இவை எல்லாம் ஏற்கனவே கடவுளை அடைந்தவர்கள் சொன்ன உண்மை. மேலும் யார் யாருக்குச் சொல்ல முடியுமோ எல்லோரிடமும் சொல்லுங்கள்.

(இதோ இந்த சிறுபதிப்பின் மூலம் நாங்களும் உங்களுக்கு தெரிவித்தோம். நீங்களும் சிவப்பணியினை முயற்சி செய்யுங்கள்.)

37 தலைவ னிடம்வலஞ் சாதிப்பார் இல்லை
தலைவ னிடம்வல மாயிடில் தையல்
தலைவ னிடம்வலந் தன்வழி யஞ்சில்
தலைவ னிடம்வலந் தன்வழி நூறே. **773**

பிராணயாமத்தை (மூச்சுப் பயிற்சியை) இடம் வலமாக பயிற்சி செய்து வெல்லக் கூடியவர் அதிகம இல்லை. இதனை சரியாக செய்தால், சக்தியாகிய ஒளி வெளிப்படும். ஐம்புலனும் அடங்கி கட்டுக்குள் இருக்கும். வாழ்நாள் நூறு ஆண்டுகள் ஆகும்.

38 போற்றுகின் றேன்புகழ்ந் தும்புகல் ஞானத்தைத்
தேற்றுகின் றேன்சிந்தை நாயகன் சேவடி
சாற்றுகின் றேன்அறை யோசிவ யோகத்தை
ஏற்றுகின் றேன்நம் பிரான்ஓர் எழுத்தே. **884**

ஞானத்தலைவனைப் போற்றி புகழ்ந்து வணங்குகின்றேன். என் மனிதில் (மனம் என்னும் கோயில்) குடி கொண்டிருக்கும் சிவன் திருவடியை எனக்கு துணையென தெரிந்து, அறிந்து கொள்கிறேன். அந்த சிவ யோகத்தினை உங்களுக்கு சொல்லுகிறேன். அந்த ஓர் எழுத்து மந்திரத்தை உனக்கும் கூறினேன். (ஓர் எழுத்து மந்திரம் என்பது "ஓம்")





நம் மனது தத்துவ ஆராய்ச்சியில் ஈடுபட்டு முன்னேறும் போது பூசணி பூ போல் அபூர்வ அழகான ஒளிகளை காணக்கூடும் என்று கூறுகிறார். இந்த சூழ்நிலையில் நமது அங்கங்களான ஐம்பொறிகளும் அடங்கும் என்பதை தான் தோட்டக்குடிகள் ஓடினார்கள் என்று குறிப்பிடுகிறார். இறுதியாக நாம் தொடர்ந்து முயற்சித்தால், இனிப்பான வாழைப்பழத்தின் சுவைப்போல் சிவப்பரம்பொருளின் அருள் கிடைக்கும் (முக்தி என்று அழகாக குறிப்பிடுகிறார்)

98 உருவிலி யுனிலி யுனமொன் றில்லி
திருவிலி திதிலி தேவர்க்குந் தேவன்
பொருவிலி பூதப் படையுடை யாளி
மருவிலி வந்தென் மனம்புகுந் தானே. **2941**

உருவம் இல்லாதவன், உடம்பு இல்லாதவன், குறை ஒன்றும் இல்லாதவன், பராசக்தியை தன் இடப்பாகத்தில் கொண்டவன். தீமைகள் செய்யாதவன். தேவாதி தேவர்களுக்கும் தலைவன். ஒப்பில்லாதவன். ஆன்மாக்களின் படை உள்ளவன். எல்லாவற்றிற்கும் ஆதாரமானவன். தனக்கு ஆதாரமில்லாத தனித்தன்மையுடைய எம்பெருமான் என் உள்ளம் வந்து புகுந்தானே.

99 ஆலைக் கரும்பும் அமுதும்அக் காரமுஞ்
சோலைத் தண்ணீரும் உடைத்தெங்கள் நாட்டிடைப்
பீலிக்கண் ணன்ன வடிவுசெய் வாளொரு
கோலப்பெண் ணாட்குக் குறையொன்று மில்லையே. **2959**

ஆலையில் பிழியும் கரும்பு சாறும், பாலும், வெல்லமும், சோலை அருவிகளும் நிறைந்துள்ளது எங்கள் நாட்டிலே (சிவபூமி). மயில் இறகில் உள்ள கண் போன்ற அழகு ஒளி போன்ற பேரழகு பெண்ணாண பராசக்தியின் அருள் இருப்பதால் எங்கள் வாழ்வில் குறைஒன்றும் இல்லை.

100 ஒன்றுகண் டீர்உல குக்கொரு தெய்வமும்
ஒன்றுகண் டீர்உல குக்குயி ராவது
நன்றுகண் டீர்இனி நமசிவா யப்பழந்
தின்றுகண் டேற்கிது தித்தித்த வாறே. **2962**

உலக இயக்கத்திற்கு காரணமாக ஒரு தெய்வம் (பரம்பொருள்) இருப்பதை அறிந்தீர். அப்பரம்பொருளே உலகத்திற்கு உயிராக இருந்து இயக்குகிறது என்பதனை அறிந்தீர். இனி நமசிவாய என்ற கனி தான் உலக உயிர்களுக்கு நன்மை தருவது என்பதனை அறிந்தீர். இந்த உண்மை உணர்ந்து அந்த சிவக்கனியை நான் சாப்பிட்டு, அதன் இனிப்பினையும், இனிமையையும் உணர்ந்தேன்.

**நீங்கள்?**

95 சிவமாடச் சத்தியும் ஆடச் சகத்தில்
அவமாட ஆடாத அம்பரம் ஆட
நவமான தத்துவ நாதாந்த மாடச்
சிவமாடும் வேதாந்தச் சித்தாந்தத் துள்ளே. **2791**

எம்பெருமான் சிவன் ஆட கூட பராசக்தியும் ஆட அதனால் நற்பயன்கள் அளிக்காத தத்துவங்களும் ஆட, அசையாத வானமும் ஆட, ஒன்பது தத்துவங்களும் ஆட, இவற்றை கடந்த அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கும் ஆட, பரம்பொருள் எனும் சிவம் வேதாந்தம், சித்தாந்தம் இவற்றின் உள் நடனம் ஆடினான்.

(ஒன்பது தத்துவம் : சிவம், சக்தி, நாதம், விந்து இவை நான்கும் அருவநிலை; மகேஸ்வரன், உருத்திரன், விஷ்ணு, இம்மூன்றும் உருவநிலை; பிரம்மா, சதாசிவம் - அருஉருவநிலை; உலக இயக்கம் சிவபெருமானின் ஆட்டத்தில் தான் இருக்கிறது என்பதனை உணர்த்தும் மந்திரம்.)

96 காணவல் லார்க்கவன் கண்ணின் மணியொக்குங்
காணவல் லார்க்குக் கடலின் அமுதொக்கும்
பேணவல் லார்க்குப் பிழைப்பிலன் பேர்நந்தி
ஆணவல் லார்க்கே யவன்துணை யாமே. **2823**

கடவுளை காணவேண்டும் என்று உறுதியாக இருப்பவர்களுக்கு அவர்களின் கணக்குள் இருக்கும் மணியாகவும், பாற்கடலில் பொங்கிய அமிர்தமாகவும், வணங்க கூடியவர்களுக்கு தவறாமல் அருள் செய்ய கூடியவனின் பெயர் சிவபெருமான். அன்புடையவர்களுக்கு எம்பெருமான் என்றும் துணையாக இருப்பான்.

97 வழுதலை வித்திடப் பாகன் முளைத்தது
புழுதியைத் தோண்டினேன் பூசணி பூத்தது
தொழுதுகொண் டோடினார் தோட்டக் குடிகண்
முழுதும் பழுத்தது வாழைக் கனியே. **2869**

கத்திரிக்காய் விதைத்திட பாகற்காய் செடி முளைத்தது. புழுதியான பூமியை தோண்டினால் பூசணி பூ பூத்தது. தோட்டத்து மக்கள் வணங்கி வழிவிட்டு ஓடினர். முழுமையாக பழுத்தது இனிப்பான வாழைப்பழமே.

**<u>இம்மந்திரம் கூறும் உட்பொருள் யாதெனில் :</u>**

பிராணயாயம் - மூச்சுப்பயிற்சி - தியானம் இவைகளை மேற்கொள்ளும் போது, கத்திரிக்காய் விதை மிகச்சிறியது. அதை போல் தியானத்தின் தொடக்கநிலையை குறிக்கிறது. அதனை தொடர்ந்து புருவ நடுவில் நினைவினை நிறுத்துதல். அச்சூழ்நிலையில் கடினமான மனம் உண்டாகும் (வைராக்யம்) அதுவே பாகற்காய் என்று கூறுகிறார். மேலும்





39 வாறே சிவாய நமச்சி வாயநம
வாறே செபிக்கில் வரும்பேர் பிறப்பில்லை
வாறே அருளால் வளர்கூத்துக் காணலாம்
வாறே செபிக்கில் வருஞ்செம்பு பொன்னே. **905**

சிவாய நம ! சிவாய நம ! என ஓயாமல் தியானிப்பவர்களுக்கு அடுத்த பிறப்பு இல்லை. (முக்தி அடைவர்) இவ்வாறு தியானித்து வந்தால், வளம் தருகின்ற திருகூத்து என்கிற இறைவனின் ஆனந்த நடனத்தை காணலாம். இவ்வாறு தொடர்ந்து, தியானித்தால், அழுக்கு இல்லாத சிவந்து மின்னுகிற பொன் போன்ற தேகம் பெறலாம்.

40 பொற்பாதங் காணலாம் புத்திரர் உண்டாகும்
பொற்பாதத் தாணையே செம்புபொன் னாயிடும்
பொற்பாதங் காணத் திருமேனி யாயிடும்
பொற்பாத நன்னடஞ் சிந்தனை சொல்லுமே **907**

பஞ்சாட்சர மந்திரத்தை (நமசிவாய) சொல்லி வருவதால் சிவபெருமானின் பொன் போன்ற பாதங்களை தரிசிக்கலாம். உனக்கு சீடர்கள் சேருவர். சிவன் அருள் கிடைத்தால், செம்பு, தங்கமாக மாறிவிடும். (பாவ அழுக்குகள் சுமந்த உடல் - அப்பழக்கற்று மின்னும் தேவ உடல் பெறுவது) அப்படிப்பட்ட ஒளி தேகம் கிடைத்தால் சிவனின் பொற்பாதத்தினை நாம் காணலாம். எனவே, இறைவன் திருவடி கிடைக்க செய்யும் மந்திரமான "நமசிவாய"த்தை தொடர்ந்து கூறுங்கள்.

41 அஞ்செழுத் தாலைந்து பூதம் படைத்தனன்
அஞ்செழுத் தாற்பல யோனி படைத்தனன்
அஞ்செழுத் தாலிவ் வகலிடந் தாங்கினான்
அஞ்செழுத் தாலே அமர்ந்துநின் றானே. **966**

ஐந்தெழுத்தான "நமசிவாய" என்பதை கொண்டே மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் எனும் ஐம்பூதங்களும் உருவாக்கப்பட்டது. இவ்வைந்தெழுத்தை கொண்டு தான் பல உயிர்கள் படைக்கப்பட்டது. இந்த ஐந்தெழுத்தே பெரிய உலகைத் தாங்கும் ஆதார சக்தியாக இருக்கின்றது. இவ்ஐந்தெழுத்தில் நம் பரம்பொருள் ஐக்கியமாகி உள்ளான்.)

42 நண்ணும் பிறதார நீத்தார் அவித்தார்
மண்ணிய நைவேத் தியமனு சந்தான
நண்ணிய பஞ்சாங்க நண்ணுஞ் செபமென்னு
மன்னு மனபவ னத்தொடு வைகுமே. **1007**

தானே விரும்பி வந்தாலும் அடுத்தவர் மனைவியை விரும்பாத மனம் படைத்தவனும், மனச் சுத்தத்தோடு செய்யப்படுகிற நிவேதனமும் (படைத்தல்), தொடர்ந்து தியானித்தலும், பஞ்சாங்க நமஸ்காரமும் (ஐந்து உடலுறுப்புமான இரண்டு முழங்கால், இரண்டு முழங்கை, நெற்றி ஆகியவை பூமியில் படும்படி விழுந்து வணங்குவது) ஐந்தெழுத்தை பொருத்தமாக அதாவது, உயிர், உணர்வு கலந்து சொல்லுகின்ற முறைதான் கடவுளை நெருங்குகிற வழிபாடு.

43 எந்தை பிரானுக் கிருமூன்று வட்டமாய்த்
தந்தைதன் முன்னே சண்முகந் தோன்றலாற்
கந்தன் சுவாமி கலந்தங் கிருத்தலான்
மைந்தன் இவனென்று மாட்டிக்கொள் ளீரே. **1026**

எம் தந்தையான சிவபெருமானிடமிருந்து ஆறு பொறிகள் வட்டமாக தோன்றின. அவற்றிலிருந்து ஆறுமுகம் கொண்ட முருகப் பெருமான் தோன்றினான். தோன்றிய கந்தன் உருவில் சிவபெருமான் கலந்து இருப்பதால் பரம்பொருளின் சிவனின் மகன் முருகன் என்பதனை உணர்ந்து கொள்வீர்களாக.

44 திரிபுரை சுந்தரி அந்தரி சிந்துரப்
பரிபுரை நாரணி யாம்பல வன்னத்தி
இருள்புரை ஈசி மனோன்மனி என்ன
வருபல வாய்நிற்கும் மாமாது தானே. **1046**

அக்னி, சூரியன், சந்திரன் என்று மூன்றாகவும் இருப்பவள். அழகானவள். ஆகாயமானவள். உலக உயிர்களை காக்கும் சிவந்த நிறம் கொண்ட துர்க்கையானவள். பல நிறங்களை உடையவள். கருநிறம் கொண்ட மகேசனுக்கு சக்தியாக விளங்கும் ஈஸ்வரி. நினைக்கும் மனதில் நிற்கும் சதாசிவ சக்தியான மனோன்மனியாக இருப்பவள். இவ்வாறு பல வடிவாகவும், உருவாகவும் இருப்பது அன்னை பராசக்தி தான்.





92 வேதங்க ளாட மிகுஆ கமமாடக்
கீதங்க ளாடக் கிளரண்டம் ஏழாடப்
பூதங்க ளாடப் புவன முழுதாட
நாதங்கொண்ட டாடினான் ஞானானந்தக் கூத்தே. **2729**

எம்பெருமான் நடராஜன் ஆனந்ததாண்டவம் என்கிற அறிவானந்த நடனம் ஆடினால் தான் வேதங்கள் ஆடும். (ஆடுதல்-இயங்குதல்) மிகுதியாக இருக்கிற ஆகமங்களும் ஆடும், பாடல்கள் இசைக்கும், ஒளி வீசும் ஆதார சக்கரங்கள் ஏழும் ஆடும். ஐம்பூதங்கள் ஆடும். உலகம் முழுவதும் ஆடும். (உலக இயக்கமே பரம்பொருளின் அசைவில் தான் இதையே நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே தில்லையுள் கூத்தனே ! என்று சிவபுராணத்தில் மாணிக்கவாசகர் கூறியுள்ளார்.)

93 ஈறான கன்னி குமரியே காவிரி
வேறா நவதீர்த்த மிக்குள்ள வெற்பேழுள்
பேறான வேதா கமமே பிறத்தலான்
மாறாத தென்திசை வையகஞ் சுத்தமே. **2755**

இந்தியாவின் தென்கோடியில் அமைந்துள்ள கன்னியாகுமரியும், காவிரி ஆறும், இவை இல்லாமல் ஒன்பது தீர்த்தங்களும், உயர்ந்த ஏழு மலைகளும் கூட போற்றத்தக்க பெருமையுடைய வேதங்களும், ஆகமங்களும் இங்கேதான் தோன்றின. எனவே நிலையாக உள்ள இந்த பூமியில் தென்பாகம் புனிதமானது. (தென்னாடு உடைய சிவனே போற்றி !மாணிக்கவாசகர்)

94 மாணிக்கக் கூத்தனை வண்தில்லைக் கூத்தனைப்
பூணுற்ற மன்றட் புரிசடைக் கூத்தனைவ்
சேணுற்ற சோதிச் சிவனாந்தக் கூத்தனை
ஆணிப்பொற் கூத்தனை யாருரைப் பாரே. **2743**

மாணிக்க ஒளிபோல் பிராகாசிக்கும் ஒளி வடிவான நடனமாடும் கூத்தன், நிறைய வளம் கொண்ட தில்லை நடராசனை, வேதாந்தத்துடன் சேர்ந்து ஆட கூடிய சுருள் சடை நடராஜனை, தூரமாக தெரிகின்ற ஒளி போல் சிவமயமான ஆடும் நடராஜனை உயர்ந்த தங்க பொன்னம்பலத்தில் ஆடும் நடராஜனை பற்றி யாரால் முழுமையாக கூறமுடியும்.

(சிதம்பரம் நடராஜர் கோயிலில் உள்ள மாணிக்க நடராஜர்க்கு (இரத்தின நடராஜர்) காலை பூஜையில் தீப ஆராதனை சிலைக்கு பின்புறமிருந்து காட்டுவார்கள் தீட்சிதர்கள் அப்போது, எம்பெருமான் ஒளி ரூபமாக காட்சி தருவார். இதைத்தான் தில்லை கூத்தன் எம்பெருமான் நடராஜனின் பெருமைகளை திருமூலர் இப்பாடலில் குறிப்பிடுகிறார்)

89 நெஞ்சு நினைந்துதம் வாயாற் பிரானென்று
துஞ்சும் பொழுதுன் துணைத்தாள் சரணென்று
மஞ்சு தவழும் வடவரை மீதுறைங
அஞ்சில் இறைவன் அருள்பெற லாமே. **2707**

மனதால் "நமசிவாய" என்று நினைத்து வணங்கி, வாயால் எம்பெருமான் என்று போற்றியும், தூங்க போகும் போது சிவபெருமானே உன் திருவடி எனக்கு துணையாக இருக்கவேண்டும் என்று வேண்டியும் வாழ்ந்து வந்தால் பனி படலம் போன்ற வெண்மையான மலையில் வாழும் ஐந்தெழுத்துக்கு அதிபதி சிவப்பரம்பொருளின் அருளை பெறலாம்.

90 சிவசிவ என்றே தெளிகிலர் ஊமர்
சிவசிவ வாயுவுந் தேர்ந்துள் அடங்கச்
சிவசிவ வாய தெளிவினுள் ளார்கள்
சிவசிவ வாகுந் திருவரு ளாமே. **2715**

சிவ சிவ என்று சொல்லி பரம்பொருளை சிந்திக்காதவர் ஊமை போன்றவர்கள். சிவ சிவ என்று தியானிப்பதால், மனமும், சுவாசமும் (மூச்சு காற்று) கட்டுக்குள் இருக்கும். இந்நிலையில் சிவ மந்திரத்தின் உயர்வினை உணர்ந்தறிந்தவர்கள் சிவபெருமானின் திருவருளாள் சிவ வடிவம் பெறுவர்.

91 சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளுஞ்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே. **2716**

சிவ சிவ என்ற சிவநாமத்தை சொல்லாதவர்கள் தீராத பாவம் உடையவர்கள். சிவ சிவ என்று கூற தீராத பாவம் தீரும். (முற்பிறவியின் பாவங்களும், வினைகளும்) சிவ சிவ என்று இடைவிடாது சொல்லுபவர் தேவராகுவர். (தேவ சரீரம் பெறலாம்) சிவ சிவ என்று நினைப்பதால் சிவ பேறும் (சிவகதி) கிடைக்கும்.





45 நல்குந் திரிபுரை நாதநா தாந்தங்கள்
பல்கும் பரவிந்து பாரண்ட மானவை
நல்கும் பரைஅபி ராமி அகோசரி
புல்கு மருளுமப் போதந்தந் தாளுமே. **1048**

திரிபுரை சக்தி, (முன் மந்திரத்தில் உள்ள விளக்கத்தைப் பார்க்கவும்) மோட்சத்தையும் அதனை கடந்த பேரின்பத்தையும் அருளுவாள். உலகம் முதலான பர அண்டங்களை காக்கும் பார்வதி. மனதுக்கும், சொல்லுக்கும் எட்டாத அன்னையாக விளங்குகின்ற அபிராமி, (அழகானவள்) அவள். உயிர்களிடத்தில் அன்போடு பொருந்தி பேரருளையும், அறிவினையும் தரக் கூடியவள்.

46 அவளை யறியா அமரரும் இல்லை
அவளன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவளன்றி ஐவரால் ஆவதொன் றில்லை
அவளன்றி யூர்புகு மாறு மாறறியேனே. **1053**

பராசக்தியை தெரியாத தேவர்களும் இல்லை. பராசக்தி தவிர்த்து, எந்த தவமும் செய்ய இயலாது. பராசக்தியின் கலப்பு இல்லாமல், (பங்களிப்பு) ஐந்தொழில் செய்கிற பிரம்மன், விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவம் இவர்களால் ஏதும் செய்ய இயலாது. பராசக்தியின் துணை அருள் இல்லாமல் முக்தி (கடவுளை சேர்தல்) அடையும் வழியும் எனக்கு தெரியவில்லை.

47 அறிவார் பராசத்தி ஆனந்தம் என்பர்
அறிவா ரறிவுரு வாமவள் என்பர்
அறிவார் கரும மவளிச்சை என்பர்
அறிவார் பரனு மவளிடத் தானே. **1054**

ஞானிகள் (அறிவில் சிறந்தவர்) பராசக்தியை பேரானந்தமானவள் என்று கூறுவர். ஞானிகள், அவள் அறிவின் (ஞானம்) வடிவானவள் என்பர். ஞானிகள், எல்லாம் அவள் செயல் நம்மால் செய்யப்படுவது எதுவாயினும், அது அவளருளாலே செய்யப்பட்டது என்பர். ஞானிகள் பரமசிவனும் அந்த பராசக்தியிடம் பொருந்தி உள்ளான் எனக் கூறுவர்.

48 பராசத்தி மாசத்தி பல்வகை யாலுந்
தராசக்தி யாய்நின்ற தன்மை யுணராய்
உராசத்தி ஊழிகள் தோறும் உடனே
புராசத்தி புண்ணிய மாகிய போகமே. 1056

பராசக்தி எல்லா வகையிலும் மேன்மை வாய்ந்த மகாசக்தி. உலக உயிர்களை தாங்கும் ஆதார சக்தியாக அவள் நிற்பதை உணர்ந்து கொள்ளவும் எங்கும் பரவக்கூடிய சக்தியானவள், யுகங்கள் தோறும் தோன்றி அருள்புரிபவள். புண்ணிய பலனை தந்தருளும் ஆதிசக்தியும் அவளே.

49 ஓங்காரி என்பா ளவளொரு பெண்பிள்ளை
நீங்காத பச்சை நிறத்தை யுடையவன்
ஆங்காரி யாகியே ஐவரைப் பெற்றிட்டு
ரீங்காரத் துள்ளே யினிதிருந் தாளே. 1073

ஓம் எனும் பிரணவ மந்திரத்தின் வடிவாக ஓங்காரியாக உள்ள அவள் ஒரு பெண்பிள்ளை (பெண்ணில் பெருந்தகை). என்றும் மாறாத மரகத பச்சை நிற மேனி (உடல்) உடையவள். எழுச்சி நாயகியானவள். ஐந்தொழில் செய்கின்ற பிரம்மன், விஷ்ணு, மகேஸ்வரன், சதாசிவம், உருத்திரன் (முறையே படைத்தல், காத்தல், அருளள், ஆளுதல், அழித்தல் ஆகிய பணிகளை செய்பவர்கள்) ஆகியோர்க்கு தன் அம்சங்களை தந்து அருளுகின்றவள். ரீங்காரத்துள்ளே அதாவது ஹ்ரீம் என்ற மந்திரத்தில் ஒலியாகவும், அதன் இனிமையாகவும் இருப்பவள்.

50 காணும் பலபல தெய்வங்கள் வெவ்வேறு
பூணும் பலபல பொன்போலத் தோற்றிடும்
பேணுஞ் சிவனும் பிரமனும் மாயனுங்
காணுந் தலைவிநற் காரணி காணே. 1087

இங்கு காணப்படுகின்ற தெய்வங்கள் பல்வேறு உண்டு. இவ்வாறு இருப்பது, தங்கம் என்ற ஒரே பொருளில் இருந்து பல்வேறு ஆபரணம் அதாவது அவரவர் விருப்பத்திற்கு ஏற்றது போல் நகைகளாக செய்து அணிந்து கொள்ளுதல் போல, பெருமையாக போற்றும் சிவன், பிரம்மன், விஷ்ணு இருக்கிறார்கள். அவர்களின் பணிகளுக்கும் காரண கர்த்தாவாக இருப்பவள் பராசக்தி தான் என்பதை உணர்வாயாக.





86 என்னிலும் என்னுயி ராய இறைவனைப்
பொன்னிலு மாமணி யாய புனிதனை
மின்னிய வெவ்வுயி ராய விகிர்தனை
உன்னிலும் உன்னும் உறும்வகை யாலே. 2516

என்னைக் காட்டிலும், என் உயிரைக் காட்டிலும் மேலான சிவபெருமானை, தங்கத்தைக் காட்டிலும் பிரகாசமான புனிதனை, இருக்கின்ற எல்லா உயிர்களுக்கும் உயிரான, முடிவில்லா ஆற்றல் உடையவனை, நீ நினைத்தால் அவன் உன்னைவிட அதிகமாக உன்னை நினைத்து அருள் செய்வான்.

87 நலம்பல காலந் தொகுத்தன நீளங்
குலம்பல வண்ணங் குறிப்பொடுங் கூடும்
பலம்பல பன்னிரு கால நினையும்
நிலம்பல வாறின னீர்மையன் றானே. 2542

நீண்டகாலமாக முக்தி பெற தொகுத்துக் கூறிய வழிகள் பல. இந்த வழிமுறைகள் காட்டும் தெய்வங்களும் பல வகை ஆகும் என்றாலும், நீங்கள் எம்பெருமானை பகலிலும், இரவிலும் பணிந்து, நினைத்து, வணங்கினால், அவ்வாறு வணங்குவோர்க்கு வழிபடும் நேரம், வழிபடும் இடத்திற்கு வந்து அருள் புரியும் பண்புடையவன் சிவபெருமான்.

88 ஆசை யறுமின்கள் ஆசை யறுமின்கள்
ஈசனோ டாயினும் ஆசை யறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வருந் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்த மாமே. 2615

ஆசை அறுத்துவிடுங்கள். எப்படிப்பட்ட ஆசையானாலும் விட்டுவிடுங்கள். அது ஈசனிடம் கொண்ட ஆசையானாலும் விட்டுவிடுங்கள். ஆசை படபட துன்பம் சேர்ந்துக் கொண்டே போகும். ஆசையை விடவிட ஆனந்தம், இன்பம் தானே வரும்.

(எம்பெருமான் மீது கொள்ள வேண்டியது காதல் என்கிற அன்பு, காமம் என்கிற ஆசை இல்லை. ஆசையை அறுத்தவன் ஆண்டவனை அடைவான். இதைத்தான் திருமூலர் உரைத்ததாக எனக்கு தோன்றுகிறது.)

83 மாயனு மாகி மலரோன் இறையுமாய்க்
காயநன் னாட்டுக் கருமுத லானவன்
சேயன் அணியன் தித்திக்குந் தீங்கரும்
பாயமு தாகிநின் றண்ணிக்கின் றானே. **2365**

மாயங்கள் புரியும் காக்கும் கடவுள் திருமாலாகவும், படைக்கும் பிரம்மனாகவும், அழிக்கும் உருத்திரனாகவும், எம்பெருமான் பரம்பொருள் ஒருவனே இம்மூன்று செயலும் செய்கின்றான். உயிர் உற்பத்தியாகும் நாட்டுக்கு தலைவன் அவனே. தூராமாகவும், மிக அருகிலும், இனிப்புமிகுந்த கரும்பு சுவையாகவும், தெவிட்டாத அமிர்தமாகவும் இருந்து நன்மை புரிகிறான்.

84 ஆய பதிதான் அருட்சிவ லிங்கமாம்
ஆய பசுவும் அடலே றெனநிற்கும்
ஆய பலிபீட மாகுநற் பாசமாம்
ஆய அரனிலை யாய்ந்துகொள் வார்கட்கே. **2411**

திருக்கோயிலின் மூலஸ்தானத்திலுள்ள (கருவறையில்) லிங்கம் தான் இறைவன் (பதி), எதிராக நிற்கும் பலம் வாய்ந்த காளை மாடான நந்தி தான் உயிர் (பசு), நந்தி பின்னால் இருக்கும் பலிபீடம் தான் பாசம் (பாசம் - பிணைப்பு, உறவுகள், பாவ புண்ணியங்களின் பலன்) இவ்உண்மையை சிவ ஆலயத்தை ஆராய்ந்து பார்த்தால் விளங்கும்.

(ஆன்மாவாகிய பசு, பதியாக சிவலிங்கத்தை நோக்க பாசமாகிய பிணைப்பு பலிபீடமாய் பின்னடையும் என்பது பொருள். பாசங்களை பலியிடுவதனால் அது பலிபீடம் சிவ ஆலயங்களின் அமைப்பு மனித வாழ்வுடன் இணைந்து உருவாக்கப்பட்டது. பசு என்றால் உயிர். பதி - இறைவன், பாசம் - பாவம், வினை)

85 ஆவ தறியார் உயிர்பிறப் போலுறும்
ஆவ தறியும் உயிரருடம் பாலுறும்
ஆவதொன் றில்லை யகம்புறத் தென்றகன்
றோவு சிவனுட னொன்றுதன் முத்தியே. **2475**

பிறவி பயனை அறியாதவரது உயிர் மீண்டும் பிறந்து துன்பம் கொள்ளும். பிறவி பயன் எம்பெருமானை வணங்கவேண்டும் என்று அறிந்த உயிர் இறைவனோடு கலந்து இன்பமாக இருக்கும். புறமாகிய உலகிலும், அகமாகிய உடலுக்குள்ளும் நிலையான இன்பம் பெறுவதற்கு காரணங்கள் ஒன்றும் இல்லை என்று உணர்ந்து அவற்றை ஒதுக்கி சிவத்தோடு சேர்வதே முத்தி எனப்படும். (முக்தி - மோட்சம்)





51 போற்றியென் பேன்புவ னாபதி அம்மையென்
ஆற்றலுள் நிற்கும் அருந்தவப் பெண்பிள்ளை
சீற்றங் கடிந்த திருநுதற் சேயிழை
கூற்றந் துரக்கின்ற கொள்பைந் தொடியே. **1150**

(புவனம்-பூமி) போற்றுகிறோன் பூமி அனைத்திலும் ஆட்சி செய்கின்ற என் அன்னையை, என்னுடைய அருந்தவத்தினுள் இருக்கும் ஆற்றலான பெண்பிள்ளையை, எனது கோபத்தை கொன்ற சிவந்த ஒளி மயமானவள். எமனையும் விரட்டும் (இறப்பை தடுக்க கூடியவள்) வலிமை கொண்ட அழகான கொடி போன்றவள்.

52 


ஓரில் இதுவே உரையும்இத் தெய்வத்தைத்
தேரிற் பிறிதில்லை யானொன்று செப்பக்கோள்
வாரித் திரிகோண மனமின்ப முத்தியுந்
தேரில் அறியுஞ் சிவகாயந் தானே. **1308**

நான் ஆராய்ந்து கூறுவது யாதெனில் இந்த பராசக்திக்கு இணையான தெய்வம் வேறு இல்லை. எனவே நான் சொல்வதை கேள். மழைப் போல் அருள் பொழியும் முக்கோணம் சக்கரத்தை மனதில் வைத்து வணங்கினால், நல்ல மனம், இன்பம், முக்தி ஆகியவை கிடைக்கும். அதுவே சிவனது வடிவமும் என்று கொள்.

53 ஒளிக்கும் பராசத்தி உள்ளே அமரிற்
களிக்கும்இச் சிந்தையிற் காரணங் காட்டித்
தெளிக்கு மழையுடன் செல்வமுண் டாக்கும்
அளிக்கும் இவளை அறிந்துகொள் வார்க்கே. **1345**

ஒளியாக பிரகாசிக்கும் பராசக்தி நம் உள்ளத்தில் வந்து குடி புகுந்தால், நாம் பேரானந்தத்தில் திளைக்கலாம். உண்மையானது எது பிறவித் துன்பத்தை வெல்லுவதற்கு தேவையானது எது என்பது போன்ற தெளிவு கிடைக்கும். மழை போல் செல்வம் கிடைக்கும். இவ்வாறு எல்லாவற்றையும் அருளுகின்றவளை மனதில் வைத்து வணங்குங்கள்.

54 நானென்றுந் தானென்றும் நாடிநான் சாரவே
தானென்று நானென் றிரண்டிலாத் தற்பதந்
தானென்று நானென்ற தத்துவ நல்கலால்
தானென்று நானென்றுஞ் சாற்றகில் லேனே. **1441**

நான் தேடி அடைய வேண்டியவன் சிவன் தான் என்று உணர்ந்து, நான் சிவனை சேர, சிவன் வேறு நான் வேறு என்று இரண்டாய் இல்லாத பரம்பொருள். சிவன் என்பது நீ தான் என்ற உண்மையை எனக்கு உணர்த்த, இப்போது சிவனும் நானும் வெவ்வேறாக இல்லாமல், ஒன்றாகி போனோம்.

(தெரிந்து கொள்ள முயற்சிக்கும் நீயும், முயன்று தெரிந்து கொண்ட சிவனும் ஒன்றே. தத்துவம்சி – நீ அதுவானாய்)

55 நாடு நகரமும் நற்றிருக் கோயிலுந்
தேடித் திரிந்து சிவபெரு மான்என்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே. **1445**

நாடு நகரங்களில் உள்ள நல்ல கோயில்களை தேடி சென்று சிவபெருமானே (நமசிவாய) என்று பாடுங்கள். பாடி பணிந்து நில்லுங்கள். இப்படி பணிந்து வணங்கினால், அவ்வாறு வணங்கும் மனிதனின் நெஞ்சே கோயில் என்று சிவனே வந்து குடி கொள்வான்.

56 நின்று தொழுவன் கிடந்தெம் பிரான்தன்னை
என்றுந் தொழுவன் எழிற்பரஞ் சோதியைத்
துன்று மலர்தூவித் தொழுமின் தொழுந்தொறுஞ்
சென்று வெளிப்படுந் தேவர் பிரானே. **1500**

எம் பரம்பொருளான சிவபெருமானை நான் நின்று வணங்குவேன். பூமியில் உடல் எல்லாம் படிய விழுந்து வணங்குவேன். நான் எப்பொழுதும் அழகிய பரம் ஒளியையே வணங்குவேன். நீங்களும் பொருத்தமான மலர்களை சிவன் மீது தூவி வணங்குங்கள். இப்படி அனுதினமும் வணங்குவோர்க்கு தேவர்களின் தலைவன் எம்பெருமான் தானே தேடி வந்து அருள் செய்வான்.





80 மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தின் மறைந்தது மாமத யானை
பரத்தை மறைத்தது பார்முதற் பூதம்
பரத்தின் மறைந்தது பார்முதற் பூதமே. **2290**

மரத்தினால் செய்யப்பட்ட யானை பொம்மையை பார்க்கும் போது யானை வடிவமே கண்ணில் நிற்கும். அப்பொம்மையை செய்ய பயன்படுத்திய மரம் பற்றிய நினைவு மனதில் தோன்றுவதில்லை. மரம் பற்றி சிந்தனை மேலோங்கும்போது யானையை மனம் மறந்திடும். இதுபோலவே பரம்பொருளின் தன்மையை இந்த உலகம் அதனில் இருக்கும். நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகியவைகளால் மறைந்தது. இவற்றையெல்லாம் இயக்கும் பரம்பொருளினை அடைய வேண்டும் என்று எண்ணம் நமக்கு ஏற்படும்போது அந்த பரம்பொருள் தான் நமக்கு தெரியும். இந்த உலகம் அதிலுள்ள ஐம்பூதமும் மறந்து போகும்.

(உலகம் மாயை-பரம்பொருள் மெய் என்பதனை உணர்த்தும் மந்திரம்)

81 வெல்லும் அளவில் விடுமின் வெகுளியைச்
செல்லும் அளவுஞ் செலுத்துமின் சிந்தையை
அல்லும் பகலும் அருளுடன் தூங்கினாற்
கல்லும் பிளந்து கடுவெளி யாமே. **2303**

முடிந்தவரை கோபத்தை குறைத்துக் கொள்ளுங்கள். மனதினை இயன்றவரை சிவசிந்தனையில் செலுத்துங்கள். இரவும், பகலும் இடைவிடாது சிவ நினைவில் உள்ளம் பொருந்துமாயின், கடினமான கல் போன்ற ஆணவ இருள் நீங்கி பரம்பொருளின் ஒளியினை வெட்ட வெளியில் காண்பீர்.

82 அறிவுக் கழிவில்லை யாக்கமும் இல்லை
அறிவுக் கறிவல்ல தாதாரம் இல்லை
அறிவே யறிவை யறிகின்ற தென்றிட்
டறைகின் றனமறை யீறுகள் தாமே. **2358**

அறிவுக்கு அழிவு என்பது இல்லை. அழிவு இல்லாதது என்றபோது அதற்கு தோன்றலும் இல்லை. ஆன்மாவாகிய அறிவுக்கு பேரறிவான சிவனைவிட வேறு ஆதாரம் இல்லை. எனவே ஆன்மா பேரான்மாவை அறிந்துக் கொள்கிறது. இதைதான் வேதங்களின் முடிவான ஆகமங்கள் கூறுகிறது.

(இங்கு அறிவு என்பதற்கு உயிர் அல்லது ஆன்மா என்று பொருள்.)

77 செல்லு மளவுஞ் செலத்துமின் சிந்தையை
வல்ல பரிசால் உரைமின்கள் வாய்மையை
இல்லை யெனினும் பெரிதுளன் எம்மிறை
நல்ல வரனெறி நாடுமி னீரே. **2103**

முடிந்த அளவு மனதினை தியானம் மூலமாக சிவசிந்தனையில் செலுத்துங்கள். முடிந்தவரை சிவன் பற்றி உண்மையை எல்லோருக்கும் எடுத்து கூறுங்கள். கடவுள் இல்லை என்று சிலர் கூறுவார்கள். எங்கும் எம் இறைவன் நிறைந்துள்ளான். எனவே சிவன் வழியில் சென்று எம்பெருமான் சிவனை அடைவீர்கள்.

78 ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணமே
சென்றே புகுங்கதி யில்லைநுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே. **2104**

மனித இனம் முழுவதும் ஒன்றுதான். அவர்கள் அனைவருக்கும் இறைவன் ஒருவன் தான். நல்லவையே எப்போதும் நினையுங்கள். உங்களுக்கு இறப்பு இல்லை, வெட்கபடாமல் சென்று அடையும் வழி வேறு இல்லை. எனவே மனதில் இறை எண்ணத்தோடும், அருள் உணர்வோடும் தடுமாற்றம் இன்றி நீங்கள் எம்பெருமானிடம் அடைக்கலம் ஆகுங்கள்.

79 தானே தனக்குப் பகைவனும் நட்டானுந்
தானே தனக்கு மறுமையும் இம்மையுந்
தானே தான்செய்த வினைப்பயன் துய்ப்பானுந்
தானே தனக்குத் தலைவனு மாமே. **2228**

ஒருவனுக்கு இன்பமும், (நட்பும்) துன்பமும் (பகையும்) வெளியில் இருந்து வருவதில்லை, அதற்கு அவனே காரணம். அவனது இந்த பிறப்பிற்கும், அடுத்த பிறப்பிற்கும் அவனே காரணம். தான் செய்த பாவங்களை தானே அனுபவிக்க வேண்டும். வேறு யாரும் பங்கிட்டு அனுபவிக்க முடியாது. இவ் உண்மைகள் ஒருவனுக்கு புரிந்து விட்டால், தானே தனக்கு தலைவன் ஆகுவான்.

(தானே தனக்கு தலைவன் என்பது - நீ சிவனை உணர்ந்தால், நீ தான் சிவம்.)





57 எய்திய காலங்கள் எத்தனை யாயினுந்
தையலுந் தானுந் தனிநா யகமென்பர்
வைகலுந் தன்னை வணங்கு மவர்கட்குக்
கையிற் கருமஞ்செய் காட்டது வாமே. **1521**

உலகமும், உலகில் உள்ள ஆன்மாக்களும் மாறி மாறி அழிந்து மீண்டும் தோன்றினாலும், அழியாமல் நிலையாக இருப்பது சக்தியும், சிவனும் என்பர். விடியற்காலையில் வந்து தன்னை வணங்கும் அடியவர்க்கு (பக்தன்) அப்பரம்பொருள் அவர்களுக்கான வழியும், தொண்டும் என்ன என்பதனை சுட்டிக் காட்டுவான்.

58 மந்திர மாவதும் மாமருந் தாவதுந்
தந்திர மாவதுந் தானங்க ளாவதுஞ்
சுந்தர மாவதுந் தூய்நெறி யாவதும்
எந்தை பிரான்தன் இணையடி தானே. **1604**

நினைப்பவர்களைக் காக்கும் மந்திர சொல்லும், பிறவி நோய்களை களைகின்ற மகத்தான மருந்தும், உதவுகின்றதனால் மனம் பெறுகிற அழகும், தூய்மையான வழியும், எம் தந்தையாகிய எம்பிரான் திருவடி துணையால் தான் ஆகும்.

59 பிரானருள் உண்டெனில் உண்டுநற் செல்வம்
பிரானருள் உண்டெனில் உண்டுநன் ஞானம்
பிரானரு ளிற்பெருந் தன்மையும் உண்டு
பிரானரு ளிற்பெருந் தெய்வமு மாமே. **1645**

சிவபெருமான் அருள் கிடைத்தால், நல்ல செல்வம் சேரும். எம்பெருமான் கருணை இருந்தால், நமக்கு நல்ல அறிவு (ஞானம்) கிடைக்கும். எம்பெருமான் ஆசியினால், பேரும், புகழும் வந்து சேரும். சிவபெருமானின் அருளால் நாமும் அவனாக ஆகலாம்.

(மேற்கூறிய விளக்கத்தில் அர்த்தம் மாறாமல் எனக்கு பிடித்தவாறு வார்த்தைகளை பயன்படுத்தி உள்ளேன்)

60 ஞானமில் லார்வேடம் பூண்டிந்த நாட்டிடை
ஈனம தேசெய் திரந்துண் டிருப்பினும்
மான நலங்கெடும் அப்புவி யாதலால்
ஈனவர் வேடங் கழிப்பித்தல் இன்பமே. **1656**

தவஞானம் இல்லாதவர்கள் சாமியார் போல் வேடம் (வேஷம்) போட்டுக் கொண்டு இந்நாட்டில் இழிவான செயல்களில் ஈடுபடுகின்றனர். பிச்சை எடுக்கின்றனர். இப்படி இழிவான செயல் செய்பவனால் நாட்டுக்கு தீமை ஏற்படும். அப்படிப்பட்ட இழிவான வேடத்தை களைத்து, உலகுக்கு காட்டுவது இன்பத்தை தரும்.

(இன்றைய காலகட்டத்திற்கு முக்கியமான தெரிந்து கொள்ள வேண்டிய மந்திரம்)

61 கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளுஞ் சாருஞ் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே. **1666**

எலும்பு (மண்டை ஓட்டு) மாலைகளை அணிந்த சிவபெருமான் கவசம் (ஆடை) போல் தன் உடல் மீது திருநீறு (விபூதி பூசிக் கொள்வான். அதை போல் நீங்களும் காக்கும் கவசமான ஒளி மங்காத திருநீறு பூசி மகிழ்ந்தீர்கள் என்றால், உங்களுக்கு ஒரு தீயதும் நேராது. பழைய பாவங்கள் ஒழியும். சிவகதி அடைவீர்கள். எல்லாவற்றுக்கும் மேலாக சிவபெருமானின் சிங்காரமான திருவடியில் தஞ்சம் அடைவீர்.

(விபூதி பூசுதல் சிறப்பு என்பது தெய்வ சித்தர் திருமூலர் வாக்கு)

62 தூய விமானமுந் தூலம தாகுமால்
ஆய சதாசிவ மாகுநற் சூக்குமாம்
ஆய பலிபீடம் பத்திர லிங்கமாம்
ஆய அரனிலை ஆய்ந்துகொள் வார்கட்கே. **1718**

மிக உயர்ந்த சிவபெருமான் அருள்பாலிக்கும் ஆலயம் பற்றி அறிய விரும்புகிறவர்களுக்கு, புனித கோயிலின் விமானம் (கருவறை என்று சொல்லப்படுவதின் மேல் பகுதி பருமனான லிங்கமாகும். அந்த விமானத்தின் கீழே கருவறையில் உள்ள சதாசிவலிங்கம் சின்ன லிங்கமாகும். கருவறைக்கு எதிரே வெளியே உள்ள நந்திக்கும், கொடி மரத்திற்கும் நடுவில் உள்ள பலிபீடம் (தாமரை பூ இதழ் போல் இருக்கும்) பத்திர லிங்கமாகும்.





74 ஐந்தில் ஒடுங்கில் அகலிட மாவது
ஐந்தில் ஒடுங்கில் அருந்தவ மாவது
ஐந்தில் ஒடுங்கில் அரன்பத மாவது
ஐந்தில் ஒடுங்கில் அருளுடை யாரே. **2035**

ஐந்தெழுத்து மந்திரமான "நமசிவாய" என்பதனை மனதில் வைத்து தியானித்தால், பரந்த உலகம் நம் வசப்படும். ஐந்தெழுத்து மந்திரமான "நமசிவாய" த்தை மனதில் வைத்து தியானித்தால் மிகப்பெரிய தவம் செய்தது போல் ஆகும். இம்மந்திரத்தை ஆராதனை செய்தால், சிவன் திருவடி நமது ஆகும். இம்மந்திரத்தை மனதில் எப்போதும் கொண்டிருப்பவர் சிவனின் அருளை பெற்றவரே.

75 கன்னி யொருசிறை கற்றோர் ஒருசிறை
மன்னிய மாதவஞ் செய்வோர் ஒருசிறை
தன்னியல் புன்னி யுணர்ந்தோர் ஒருசிறை
என்னிது ஈசன் இயல்பறி யாரே. **2073**

பெண்கள் மீது காமம் கொண்டிருப்பவர்களுக்கு அதுவே தடை, நன்றாக படித்தவர்களுக்கு அதுவே ஒரு தடை (எல்லாம் அறிவியல் வளர்ச்சி ஆண்டவன் அருள் இல்லை என்பது) மிகப்பெரிய அளவில் உடலை வருத்தி தவம் புரிபவர்க்கு அதுவே ஒரு தடை, இது ஏன், நான் யார், இப்படி தன்னையும், தன் ஆன்மா பற்றியும் ஆராய்ந்து கொண்டிருப்பவர்களுக்கு அவர்களின் அறிவே ஒரு தடை, இப்படிபட்டவர்கள் என் ஈசனின் இயல்பை அறியமாட்டார்கள்.

(Lord Siva is very very simple)

76 கடன்கொண்டு நெற்குத்துக் கையரை யூட்டி
உடம்பினை யோம்பி உயிராத் திரிவார்
தடங்கொண்ட சாரல் தழல்முரு டேறி
இடங்கொள்ள டுடலார் கிடக்கின்ற வாறே. **2086**

கடன் வாங்கியாவது அரிசி பெற்று அதனை உணவாக்கி வஞ்சக தன்மையுடைய இப்புலன்களுக்குக் கொடுத்து உடம்பை பெரிதாக போற்றி வளர்ப்பர், உடம்பு தான் உயிர் (ஆன்மா) என்று எண்ணி அறிவில்லாமல் திரிவர், ஒருநாள் விரிந்து பரந்த மலைப்பகுதியில் பெரியஅளவில் வளர்ந்துள்ள மரக்கட்டைகளுக்கு (விறகு) இந்த உடம்பு எரிந்து போகும் என்பதனை இவர்கள் அறியமாட்டார்கள்.

(உடம்பை வளர்க்காமல் ஆன்மாவில் சிவசிந்தனை வளர்க்க வேண்டும் என்பதனை இம்மந்திரம் கூறுகிறது. ஆன்மா நிலைக்கும் - உடல் அழியும்.)

71 உச்சியுங் காலையும் மாலையும் ஈசனை
நச்சுமின் நச்சி நமவென்று நாமத்தை
விச்சுமின் விச்சி விரிசுடர் மூன்றினும்
நச்சுமின் பேர்நந்தி நாயக னாகுமே. **1850**

காலை, மதியம், மாலை என்று எப்போதும் மனம் விரும்பி "நமசிவாய" என்ற மந்திரத்தை சிவனை நினைத்து துதியுங்கள். வாழ்த்தி புகழுங்கள். அக்னி, சூரியன், சந்திரன் ஆகிய மூன்றின் வழியாக ஒளி தர விரும்பும் நாதன் பெயர் நந்தி அவனே தலைவன் ஆவான்.

("நமசிவாய" எனும் நாமத்தை விதைத்தால், சிவன் அருள் கிடைக்கும்.)

72 அகரம் ஆயிரம் அந்தணர்க் கீயலென்
சிகரம் ஆயிரஞ் செய்து முடிக்கிலென்
பகரு ஞானி பகலூண் பலத்துக்கு
நிகரிலை என்பது நிச்சயந் தானே. **1860**

வேதம் ஓதும் அந்தணர்களுக்கு ஆயிரம் வீடு தந்தாலும் என்ன பயன்? கோயில்கள் ஆயிரம் கட்டினாலும் என்ன பயன்? நல்ல அறிவுடைய ஞானிகளான சிவனடியார்க்கு, ஒரு பகல் உண்பதற்கு, உணவு கொடுத்தால் வருகின்ற பயன் மிகவும் சிறந்தது. மேல் சொன்ன பயன்களை விட அதிக நன்மை தரக்கூடியது என்பது உண்மை.

73 கற்ற பசுக்கள் கதறக் திரியினுங்
கொற்ற பசுக்கள் குறிகட்டி மேயினு
முற்ற பசுக்கள் ஒருகுடம் பால்போது
மற்றைப் பசுக்கள் வறள்பசு தானே. **2015**

வேதாந்த ஞானங்களை கற்றுத் தேர்ந்த உயிர்கள் போதிய அனுபவம் இல்லாமல் பிதற்றிக் கொண்டு திரிந்தாலும், அரசு செல்வாக்குப் பெற்றுக் கொண்டு அப்பதவிகளை கட்டிக் கொண்டு திரியும் உயிர்களும், முதிர்ந்த அனுபவம் உள்ளவர்களின் சிறு அறிவு ஒரு குடம் பால் போல் பயனளிக்கக் கூடியது. மேல் சொன்ன மற்றவையெல்லாம் வறண்ட மாடு போல் பயன் (பால்) தராது.





63 துன்றந் தயிர்நெய் பால்துய்ய மெழுகுடன்
கன்றிய செம்பு கனலிர தஞ்சலம்
வன்திறல் செங்கல் வடிவுடை வில்லம்பொன்
றென்றியங் கொன்றை தெளிசிவ லிங்கமே. **1720**

கட்டித்தயிர், நெய், பால், தூய்மையான பசுவின் சாணம், சுத்தமான செம்பு, நெருப்பு, பாதரசம், வலம்புரி சங்கு, நன்கு சுட்ட செங்கல், அழகான வில்வ இலை (அழகான மூன்றிதழ் கொண்ட வில்வ இலை) மற்றும் தங்கம் ஆகியவற்றுள் அழகாய் விளங்கும் ஒன்றை எடுத்து சிவலிங்கமாய் பாவித்து வழிபடலாம்.

64 வேதா நெடுமால் உருத்திரன் மேலீசன்
மீதான ஐம்முகன் விந்துவும் நாதமும்
ஆதார சத்தியு மந்தச் சிவனொடுஞ்
சாதா ரணமாஞ் சதாசிவந் தானே. **1731**

வேதம் அருளிய பிரம்மன், உலகம் அளக்க உயர்ந்த பெருமாள், உருத்திரன், மேலான மகேசன் இவர்கள் அனைவருக்கும் மேலான ஐந்து முகம் கொண்ட சதாசிவன் ஒளி, ஓசை இதற்கெல்லாம் ஆதாராமான பராசக்தி, இறுதியாக உள்ள சிவன் இவர்கள் எல்லாமே பொதுவாக **'சதாசிவம்'** என்றே சொல்லப்படும்.

65 அஞ்சு முகமுள ஐம்மூன்று கண்ணுள
அஞ்சினொ டஞ்சு கரதலந் தானுள
அஞ்சுடன் அஞ்சா யுதமுள நம்பியென்
நெஞ்சு புகுந்து நிறைந்துநின் றானே. **1736**

ஐந்து திருமுகம், பதினைந்து கண்கள் (நெற்றி கண்ணோடு சேர்த்து), பத்து திருக்கரங்கள், அத்திருக்கரங்களில் பத்து படைக்கலங்கள் (ஆயுதம்) இவ்வாறு தோற்றம் கொண்ட எம் தலைவன் என் உள்ளம் புகுந்து நின்றான்.

(திருமூலர் இம்மந்திரத்தில் கூறிய உருவமுடைய பஞ்ச முக சதாசிவ மூர்த்தி உடன் மனோன்மணி அம்பாளை, நீங்கள் சென்னை-1, எண்.77, அரண்மனைக்கார தெரு, மண்ணடியில் அமைந்துள்ள ஸ்ரீ கச்சாலீஸ்வரர் உடனுறை சௌந்தரம்மாள் திருக்கோயில் கருவறையில் தரிசிக்கலாம். இப்படிப்பட்ட உன்னதமான அமைப்பு வேறு எந்த கோயிலிலும் காணமுடியாது என்பது எமது தாழ்மையான கருத்து.)

66 நானுநல் லீசான நடுவுச்சி தானாகுந்
தானுவின் றன்முகந் தற்புருட மாகுங்
காணும் அகோரம் இருதயங் குய்யமா
மாணுற வாமமாஞ் சத்திநற் பாதமே. 1742

நெஞ்சு சிரஞ்சிகை நீள்கவ சங்கண்ணாம்
வஞ்சமில் விந்து வளர்நிறம் பச்சையாஞ்
செஞ்சுறு செஞ்சுடர் சேகரி மின்னாகுஞ்
செஞ்சுடர் போலுந் தெசாயுதந் தானே. 1743

1. ஓம் ஈசான மூர்த்தியே போற்றி ! 2. ஓம் தற்புருட வக்த்ராய போற்றி ! 3. ஓம் அகோர இருதாயாய போற்றி ! 4.ஓம் வாடதேக குஹ்யாய போற்றி ! 5. ஓம் சத்தியோசத மூர்த்தியே போற்றி ! என்று சதாசிவ மூர்த்தியின் பாதம் முதல் சிரசு (தலை) வரை போற்றும் மந்திரங்கள்.

1. இருதாயாய நம 2. சிரசே நம 3. சிகாய நம 4. தவசாய நம 5. நேத்திரேப்யோ நம 6. அஸ்திராய நம என்று தியானித்தால் பராசக்தி அருளுவாள்.

(திருமூலர் மேற்கூறிய இரண்டு பாடல்களில் 11 மந்திரங்களை அருளி உள்ளார். இம்மகா மந்திரங்களை உள்ளமுருக கூறினால், திருவருள் கிடைக்குமென்று எளியேன் கூற்று.)

67 உருவும் அருவும் உருவோ டருவும்
மருவு பரசிவன் மன்பல் லுயிர்க்குங்
குருவு மெனநிற்குங் கொள்கைய னாகுந்
தரவென நல்குஞ் சதாசிவன் தானே. 1763

உருவமாகவும், கண்ணுக்கு தெரியாதவனாகவும், கண்ணுக்கு புலப்பட்டும், படாமலும் இருப்பதை போன்ற தன்மையாகவும் ஆக மூன்று திருமேனிக் கொண்ட பரம்பொருள், நிலைபெற்ற அனைத்து உயிர்களுக்கும் குருவாக மாறும் கொள்கையுடையவன். கற்பக மரம் போல் வேண்டுவர்களுக்கு வேண்டிய எல்லாம் தரும் சதாசிவனும் அவனே.

(வேண்டுவன எல்லாம் தரும் பரம்பெருள்)





68 அவனும் அவனும் அவனை யறியார்
அவனை யறியில் அறிவானும் இல்லை
அவனும் அவனும் அவனை யறியில்
அவனும் அவனும் அவனிவ னாமே. 1789

சரியை, கிரியை அதாவது சமய சடங்குகளால் கடவுளை அறிய முற்பட்டால், அவர்களால் பரம்பொருளை அறிந்து கொள்ள முடியாது. யாரேனும் தன்னுள்ளேயிருக்கும் கடவுளை உணர்ந்தால், அப்படி பரம்பொருளை உணர்ந்தவன் அந்நிலையில் இருக்க மாட்டான். (உதாரணமாக-காணப்படுகிற காட்சியும் காணப்படுபவனும் ஒரே நிலையில் தோன்றுவான்) அதே போல் சமய சடங்குகளால் பரம்பொருளை காணமுற்பட்டவர்கள் மாறி மேல் சொன்னவாறு அவனை உணர்ந்தால், அறிந்து கொண்ட அவனும், சிவனும் ஒன்று.

69 உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கங்
கள்ளப் புலனைந்துங் காளீர் மணிவிளக்கே. 1823

மனிதனின் உள்ளம் சிவபெருமானின் கருவறை (மூலஸ்தானம்) இந்த உடம்பு கோயிலாகும். அருளினை வாரி வழங்கும் வள்ளல் எம்பெருமானைக் காண நமது வாயே நுழைவு வாசல். நன்றாக உணர்ந்தவர்களுக்கு (ஞானிகளுக்கு) உயிர் (ஆன்மா) தான் சிவலிங்கம். நமது உடலில் பொருந்தியுள்ள வஞ்சகமான ஐம்புலனும் (மெய், வாய், கண், மூக்கு, செவி) பெரிய ஒளி பொருந்திய விளக்குகளாகும்.

70 புண்ணியஞ் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண் டருள்புரி யாநிற்கும்
எண்ணலி பாவிகள் எம்மிறை யீசனை
நண்ணறி யாமல் நழுவுகின் றாரே. 1828

சிவனுக்கு பூஜை செய்ய நினைப்பது புண்ணியம் ஆகும். அப்புண்ணியத்தை செய்வதற்கு பூவும், நீரும் போதும். அப்பரம் பொருளான சிவபெருமான் அதனை கண்டு மனமுருகி, அருள் செய்வான். இதனை உணராத கணக்கில்லாத பாவி மக்கள் எம் இறைவன் ஈசனை அடையாமல், விலகி போகின்றனரே தங்கள் அறியாமையால்.